Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 20

**கலண்டர்**

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஒரு பொக்கற் கலண்டரும், ஒரு மேசைக் கலண்டரும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற்**

**சோப் தொழிற்சாலை**

5. பெ. இல. 77 - யாழ்ப்பாணம்.

**ஈழநாடு**

வாரமலர்

மலர் 12 | மார்கழி 20 | துல்கஃதா 6 | (4-1-71) | திங்கட்கிழமை | இதழ் 325

# தமிழ்நாடு சட்ட சபை கலைக்கப்படுமா?



## இரண்டுநாளில் தெரியும்

## முதலமைச்சர் கருணாநிதி தகவல்

சென்னை, ஜன. 3

தமிழ்நாடு ராஜ்ய கீழ் சட்டசபை கலைக்கப்படுமா என்பது இன்னும் இரண்டு நாளில் தெரியும்.

இந்தத்தகவலை தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி இன்று வெளியிட்டார்.

இந்திய ஆட்சிமன்றத் தேர்தல் (லோக்சபை) நடக்கும் அதேசமயத்தில் தமிழக ராஜ்ய கிழ்சட்டசபைத் தேர்தலும் நடைபெறவேண்டுமா என்பதுபற்றி ஆராய திராவிட முன்னேற்றக் கழக நிர்வாக. பொதுச்சபை கூடியது.

தி. மு. க. தலைவர், பொதுச் செயலாளர் ஆகிய இருவருக்கும் ராஜ்ய கீழ் சட்டசபையைக் கலைப்பதா, இல்லையா'' என்றமுடிவை எடுக்கும் அதிகாரத்தை தி.மு.க. பொதுச் சபை வழங்கியுள்ளது.

தி. மு, கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் திரு. கருணாநிதியாவார்.

சட்டசபையைக் கலைத்து லோகசபைக்குத் தேர்தல் நடக்கும் அதே சமயத்தில் தேர்தலை நடாத்தவேண்டுமென பொதுச்சபையில் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் அபிப்பிராயம் தெரிவித்ததாக அறியப்படுகிறது

இன்னும் இரண்டு நாட்களில் தமிழக ராஜ்ய கீழ் சட்டசபை கலைக்கப்படுமா- கலைக்கவேண்டாமா என்ற முடிவு எடுக்கப்பட்டு விடும் என்று தெரிவித்தார்.

## 'வடபகுதி பௌத்த பாடசாலைகளுக்கு உதவுவேன்'

### கல்வி அமைச்சர் உறுதி

(பருத்தித்துறை நிருபர்)

''வடபகுதியிலுள்ள பௌத்த பாடசாலைகளின் வளர்ச்சிக்கு நான் உதவியளிக்க ஆயத்தமாயுள்ளேன் கிராமப்புறங்களில் இதுவரைகாலமும் சமசந்தர்ப்ப மற்று வாழ்ந்துவரும் மக்களின் கல்வியபிவிருத்தியில் சிரத்தைகாட்டுவதே எனது விருப்பம். இப்பௌத்த பாடசாலைகளை மகாவித்தியாலய அந்தஸ்துக்கு உயர்த்தி அங்கு விஞ்ஞானப் பாடங்கள் கற்பிப்பதற்கான வசதிகளைச் செய்துதர நடவடிக்கை எடுப்பேன். அவற்றுக்குத் தேவையான நிலங்களைப் பெற்றுக் கொடுப்பேன். அங்கு வேலைசெய்த அனைவருக்கும் தகுந்த வேலை வாய்ப்புகள் அளிப்பேன்.''

இவ்வாறு தம்மைப்பேட்டி கண்ட வடபகுதி பௌத்த காங்கிரஸ் கிளைக் குழுவிடம் கல்வியமைச்சர் அல்ஹஜ் பதியுதீன் மஹ்மூத் தெரிவித்தார்.

இக்குழுவில் யாழ்ப்பாணம் நாகவிகாரை பிரதம குருவண. கடவத்தை நந்தராம மகாநாயக்கதேரோ திரு. ஆர். டேவிட், செயலாளர் திரு. வி. இரட்டா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

மேலதிக சிங்கள ஆசிரியரை இப்பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதாகவும் கல்வியமைச்சர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிகிறது.

## இலங்கையரல்லாத 134 பேரின் நாணயமாற்றுரத்து

### இறக்குமதியை கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும்

(நமது நிருபர்)

பெருந்தொகையான உப உணவுப்பொருட்களை இறக்குமதி செய்த இலங்கையரல்லாத 134 பேரது வெளிநாட்டு நாணய மாற்றுச் சான்றிதழை அரசாங்கம் ரத்துச்செய்துள்ளது. கொழும்பு புறக்கோட்டையிலுள்ள செட்டியார் தெருவில் நகை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள 73 பேரது தற்காலிக வாச பர்மிட்டும் பிரதமரின் உத்தரவின் பேரில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ள ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் இலங்கையரல்லாத 134 பேரும் செய்து வந்த இறக்குமதி வர்த்தகத்தைப் பொறுப்பேற்கும்.

பம்பாய் வெங்காயம் போன்றவற்றை பெருந்தொகையாக இவர்கள் இறக்குமதி செய்து வந்ததாக அரசாங்க அறிக்கை தெரிவிக்கிறது.

உப உணவுப் பொருட்களை மக்கள் கஷ்டமின்றி பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புதிய இறக்குமதி ஒழுங்குகள் யாவற்றையும் புதிய அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் செய்யும் என்றும் அவர் சொன்னார்.

புறக்கோட்டையிலுள்ள செட்டியார் ஒருவர் நகை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த 73 பேரும் இம்மாதம் 31-ந் திகதி செல்வார்கள் என்றும் அவர்களுடைய தற்காலிக வாச பர்மிட் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இலங்கையருக்கு வாய்ப்பளிப்பதற்காக இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

— —

### பட்டாசு கொளுத்தி 62 பேர் காயம்

(நமது நிருபர்)

புதுவருட தினத்தில் பட்டாசு கொளுத்தியதனல் 62 பேர் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு விபத்துசேவைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

### இளம்பெண் தற்கொலை

(எழுதுமட்டுவாள் நிருபர்)

தாயுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக மனமுடைந்த இருபத்திமூன்று வயது அழகிய இளம்பெண் தன் உயிரை மாய்த்துக் கொண்டார். மீசாலையில் இச்சம்பவம் நடந்தது. நல்லதம்பி என்பவரின் மகள் பூபதியே இப்பரிதாப முடிவுக்குள்ளானவராவார். மரணவிசாரணை நடாத்திய திரு. எஸ். கே. திரவியநாயகம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

— —

### மாஜி. எம். பி. காலமானார்

(நமது நிருபர்)

மாஜி மாவத்தகம ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஹெரத் எக்கநாயகா குருநாகல அரசாங்க ஆஸ்பத்திரியில் நேற்று காலமானார். இவர் ஐ. தே. கட்சி அரசாங்கத்தில் 1965-ல் மாவத்தகம ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்தார். பின்னர் மே 1970-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோல்வியுற்றார்.

## "மொழிமீதுள்ள பற்று வெறியாக மாறக்கூடாது"

—நெடுஞ்செழியன்

சென்னை, ஜன. 3

''தமது மொழிமீது பற்று வைக்கவேண்டியது அவசியம் தான். ஆனல் அது வெறியாக மாறக்கூடாது'' என்று தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தேசிய புத்தக டிறஸ்ரின் எழுத்தாளர் முகாமை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் கூறினர்.

ஆந்திரா கல்வி மந்திரி திரு. ஆர். நரசிங்கராவ் தலைமையில் நடந்த இந்த விழாவில் திரு. நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'எழுத்தாளர்கள் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு உழைக்கவேண்டும். கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனல் அவை பகைமையை ஏற்படுத்தக்கூடாது. தனது மொழிமீது ஒருவருக்கு பற்று இருக்கவேண்டியது அவசியம்தான். ஆனல் அது வெறியாக மாறிவிடக் கூடாது.'':

— —

### சீரற்ற காலநிலை

கரையோர மீன்பிடிப் பகுதிகளில் மேலும் 24 மணித்தியாலங்களுக்குச் சீரற்ற காலநிலை இருந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சிக்கல்லூரியை கல்வி அமைச்சர் திறந்துவைப்பார்

கோட்டை, ஞாயிறு

மாத்தறைப் பயிற்சிக் கல்லூரியைஇன்று கல்வியமைச்சர் கலாநிதி பதியுதீன் மாமூத் திறந்துவைக்கவிருக்கின்றார்.

நவீன முறையில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட இப்பயிற்சிக் கல்லூரியை நிறுவ 2 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. பயிற்சிக்கல்லூரிக்கு ஆரம்பத்தில் 100 மாணவர்கள் அனுபதிக்கப்பட்டுள்ளார்கள்.

உதவிக் கல்விமந்திரி பி. வை. துடாவையின் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள இப்பயிற்சிக் கல்லூரியை திறந்துவைக்கும்படி திரு. துடாவை கல்வி மந்திரியை அழைத்திருந்தார்.

### 45 பேர் பலி

லண்டன், ஜன 3

சரக்கு வண்டியொன்றும், பிரயாணிகள் வண்டியொன்றும் மோதிக்கொண்டதில் 45 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். பலர் படுகாயத்துக்குள்ளானர்கள். விமானத்தில் மருத்து வகைகள் ஸ்தலத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

# அரசியல் அரங்கு

# இந்தியாவில் இடைத் தேர்தல் ராஜாஜி அச்சம்; இந்திரா உறுதி

1944-ம் வருடம் அட்டனில் நடைபெற்ற "இலங்கை இந்தியர் காங்கிரஸுக்கு" ராஜாஜி வந்திருந்தார். (அவர்தான் இதன் பெயரை மாற்றும்படி யோசனை கூறியது) அச்சமயம் அவருக்கு கொழும்பு காலிபேஸ் ஓட்டலில் ஒரு சிற்றுண்டி உபசாரம் நடந்தது. முதல் அமைச்சராக இருந்த பெரிய சேனநாயகாவும் வந்திருந்தார். வரவேற்புக்கு ராஜாஜி பதிலளித்துப் பேசுகையில், "மோட்டார் வண்டியுடன் நாம் பிணைத்துக்கொண்டு செல்லுவதைவிட கட்டை வண்டியுடன் பிணைந்து செல்லுவது அதிக பத்திரமாகும்" என்றார். கட்டை வண்டி என்றது பிரிட்டன்; மோட்டார் என்றது ரஷ்யா முதலிய கம்யூனிஸ்டு நாடுகள்.

இலங்கையும் இந்தியாவும் அப்போது அரசியல் விடுதலை அடையும் தறுவாயில் இருந்துவந்தன. விடுதலை பெற்றதும், பிரிட்டனுடன் இணைந்து செல்லுவதா? அல்லது கம்யூனிஸ நாடுகளுடனு? என்ற பிரச்னை, இலங்கையைப்போல் இந்தியாவுக்கும் இருந்தது. கம்யூனிஸ நாடுகளுடன் இணைந்து அதிவேகமாகச் செல்லுவதால், ஆபத்து ஏதும் ஏற்படலாமென்றும், கட்டை வண்டிபோல் மெதுவாகச் செல்லும் பிரிட்டனுடன் இணைந்து செல்லுவது பத்திரமாகுமென்றும் கருத்துப்பட அவர் கூறியபோது பெரிய சேனநாயகாவின் முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றியது. 26 வருடங்களுக்குமுன் ராஜாஜி தெரிவித்த அந்த அச்சம் இன்னும் அவரை விட்டு நீங்கவில்லை.

வருகிற இடைத் தேர்தலில் இந்திரா காந்தியை மக்கள் ஆதரித்தால் "நமது அரசியல் அமைப்புத் திட்டம் கிழித்தெறியப்படும். நமது சுதந்திர உரிமைகளை எல்லாம் இழப்போம்; முடிவில் இந்தியா. கம்யூனிஸ ஏகாதிபதியத்தில்இணைந்துவிடும்" என்று 93 வயதான ராஜாஜி எச்சரிக்கை செய்கின்றார்.

0 0 0

இந்திய லோகசபையிலே பிரதமர் இந்திராகாந்திக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு மேல்கூட ஆதரவு இருந்தது. மன்னர்களின் பென்ஷன் சலுகையைப் பறிக்கும் மசோதாவுக்கு அமோக ஆதரவு கிடைத்து அது நிறைவேறியதே இதற்குச் சான்று. ஆனால் ராஜ்ய சபையில்தான் மூன்றில் இரண்டு பங்கு வாக்குக்கு ஒன்றே ஒன்று குறைவாகக் கிடைத்து. அம்மசோதா நிறைவேற முடியாமற் போயிற்று. அதனாலேயே, ஜனாதிபதி கிரி தமது விசேஷ அதிகாரத்தைப் பிரயோகித்து அவசரச் சட்டமூலம் அம்மசோதாவைச் சட்டமாக்கினார். தலைவர் கிரியின் இந்த உத்தரவை ஆட்சேபித்தே, முன்னாள் மன்னர்கள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தனர். சுப்ரீம் கோர்ட்டார், அந்த மனுவை ஏற்று, ஜனாதிபதி ரிக்கு. அவ்வித சட்டத்தைப் பிறப்பிக்க அரசியல் அமைப்பு இடம் தராதென்றும். ஆகவே அவரது உத்தரவு சட்டவிரோதமாகுமென்றும் தீர்ப்பளித்தனர். சுப்ரீம்கோர்ட்டின் இத்தீர்ப்புத்தான், பிரதமர் இந்திராகாந்தியை, லோகசபையைக் கலைத்து இடைத்தேர்தல் நடத்தும்படி செய்ததென்று கூறின் அது தவறாகாது.

காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டபின் லோகசபையில் மொத்தம் 522 ஸ்தானங்களில் இந்திராவின் காங்கிரஸுக்கு 228தான் இருந்தன அதாவது பெரும்பான்மைப் பலமில்லை. இன்னும் அதிகப்படியாக 34 ஸ்தானங்களாவது அவருக்குத் தேவைப்பட்டது அக்குறையைத் தீர்த்துக் கொள்ள, கம்யூனிஸ்ட், பிரஜாசோஷலிஸ்ட். தி.மு.க முதலிய கட்சிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர் பெறவேண்டியேற்பட்டது.



அவரது காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடியாகசிண்டிகேட (நிஜலிங்கப்பா) காங்கிரஸுக்கு 65 ஸ்தானங்களேயுண்டு. ஆகவே மாற்று மந்திரிசபையை அமைக்கக் கூடிய பலமும் செல்வாக்கும் அச்சபையில் வேறு எந்தக் கட்சிக்குமில்லை என்பது தெளிவு. இக்காரணம்பற்றியே, சபையைக்கலைத்து இடைத்தேர்தல் நடத்தவேண்டுமென்று பிரதமர் இந்திரா கூறிய யோசனையை, ஜனாதிபதி கிரி உடன் ஏற்றிருக்கவேண்டும். சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பு ஜனாதிபதிமீதுமட்டுமன்றி இந்தியாவின் ஆட்சியின்மீதும் பிறப்பித்த ஒரு மறைமுகமான கண்டனமே. இதிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ளஒரேவழி பொதுத்தேர்தல்மூலம் பொதுமக்களுக்குச் செய்யும் ஓர் அப்பீலேயாகும். இவ்விரு காரணங்களால்தான், 14 மாதங்களுக்கு முன்னதாகவே சபையைக் கலைத்து, பொதுத் தேர்தலை நடத்த வேண்டிய அவசியம் பிரதமர் இந்திராவுக்கு ஏற்பட்டது.

தலைமை அரசாங்கம் பலமாக இல்லாததால் அதின் நேர்முகஆட்சிக்கு உட்பட்ட மேற்கு வங்காளம் முதலிய இடங்களில் அமைதியும் ஒழுங்குமில்லை. பலாத்கார சம்பவங்கள் அதிகரித்து மக்கள் நிம்மதியாக வாழ முடியாமலுள்ளது. புதிய பொதுத் தேர்தல் மூலம் தலைமையில் பலமான ஆட்சி ஏற்படுமாயின், அது தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கவும், மேற்கு வங்காளம் முதலியஇடங்களில் அமைதி ஏற்படவும்முடிவதாக இருக்கலாம். லோகசபை கலைக்கப்படவேண்டி ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு தேசிய காரணமாகும். ஆகவே எப்படிப் பார்த்தாலும், இச்சமயம் லோகசபை கலைக்கப்பட்டு, புதிய பொதுத்தேர்தல் நடப்பது வரவேற்கத் தக்கதே.

— பராசரன் —

இன்னும்மூன்றே மாதங்களில் ஆறாவது மார்ச்மாதம் லோகசபைக்கு பொதுத் தேர்தல் நடக்கும். பிரதமர் இந்திரா அகில இந்திய ரீதியில் எந்தக் கட்சியுடனும் கூட்டு சேரப்போவதில்லையென்றும், மாகாணங்களில் சில கட்சிகளுடன்ஒத்துழைக்கலாமென்றும் தெரிவித்துள்ளார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தி. மு. க. வுடன் இந்திரா காங்கிரஸ் ஒத்துழைக்குமென்றே கொள்ளலாம். அங்கு இவ்வாரம் நடைபெற்ற 10 மாநகரசபைத் தேர்தல்களில், இந்திரா காங்கிரஸ் போட்டியிடவில்லை. 10 மாநகரசபைகளில் 6 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது, தி. மு. க. கூட்டணி. ஆனல் தி. மு. க. கோட்டை என்று கருதப்பட்ட திருச்சியில் நிஜலிங்கப்பா காங்கிரசுக்கு 11 ஸ்தானங்களும் தி. மு. க. வுக்கு ஐந்தும் தான் கிடைத்துள்ளன. தமிழகத்தில் இந்திராகாங்கிரஸ் சில தொகுதிகளிலாவது போட்டியிடுமா? இன்று தி. மு. க. வகிக்கும் 24 ஸ்தானங்களில் ஒன்றையும் அது இந்திரா காங்கிரசுக்கு விட்டுக்கொடுக்குமா என்பது சந்தேகம். அது தவிர 17 ஸ்தானங்கள் தமிழகத்துக்கு உண்டு. அங்கு புதிய காங்கிரஸ்போட்டியிடலாம்.

இரண்டு காங்கிரஸுகள் லோக்சபைக்குப் போட்டியிடுவது இதுவே முதல் தடவை. பிரதமர் இந்திராவை கம்யூனிஸ்ட் என்று கூறுவது சரியாகாது. கேரள சட்டசபைத் தேர்தலில் அவரது காங்கிரஸ், கம்யூனிஸ்ட் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்டு வென்றுள்ளனர். லோக்சபையில் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டதற்கு, நிஜலிங்கப்பா காங்கிரஸே பெரிதும் காரணமாகும். தனிப்பட்ட குரோதங்களே, காங்கிரஸ் பிளவுக்குக்காரணமேயன்றி' கொள்கை அடிப்படை என்று கூறமுடியாது. மன்னர்களின் பென்ஷன்சலுகைகளைக் கொடுக்கவேண்டு



மென்று சுப்ரீம்கோட்டார் தீர்ப்பளித்துள்ளதால் அவர்களுக்கு அது கொடுக்கப்படுமென்றே பிரதமர் இந்திரா கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. பழைய காங்கிரஸைச் சேர்ந்தவர் பலர், புதக் காங்கிரசில் சேர முன்வருவதாகத் தெரிகிறது. அவர்களை பிரதமர் இந்திரா தடையின்றி வரவேற்கின்றார். தேர்தற்காற்று பிரதமர் இந்திராவின் பக்கமே வீசுகிறதென்று கருதுவது அதிகதவறாகாது.

விடுதலைபெற்றபின் இலங்கையைப்போல் இந்தியாவும் காமன்வெல்த்தில் சேர்ந்தே இருக்கின்றது. அந்தக்குடும்பத்திலிருந்து விலகவில்லை. இதே சமயம் ரஷ்யா, புது சீனம் முதலிய கம்யூனிஸ் நாடுகளுடனும் உறவுகள் வைத்துக்கொண்டிருக்கின்றன. கூட்டுசேரா நாடுகளாக, இருவல்லரசுக்கோஷ்டிகளிலும்சேராமல்இலங்கையும் இந்தியாவும் தொடர்ந்து இருக்கவே விரும்புமென்றே கொள்ளலாம். 'கம்யூனிஸ் ஏகாதிபத்தியத்தில் 'இந்தியா சேர்ந்துவிடுமென்று அஞ்சுவதற்கு ஆதாரமில்லை. லோக்சபைக்கு நடக்க இருக்கும் தேர்தலில் இந்திராவின் கட்சிக்கு பெரும்பான்மை பலம் கிடைக்குமாயின், அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைநாடவேண்டியுமிராது. அதிக துணிச்சலுடன் நாட்டில்அமைதியை நிலைநிறுத்தி, பல பிரச்சினைகளையும்தீர்க்க முற்படலாம்.

இந்தியாவுக்கு உள்ளும் புறமும் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்க்க உள்நாட்டில் ஒற்றுமையும் கட்டுப்பாடும்மிகஅவசியம். புதிய தேர்தல் அதற்குவழிசெய்யுமா?

## 500 படகுகள் வழங்கப்படும்

(நமது நிருபர்)

மீனவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 500 இயந்திரப் படகுகள் வழங்கவிருப்பதாக அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதுவரை காலமும் 200 இயந்திரப் படகுகளே வழங்கி வந்தது.

6- 1- 71 புதன்கிழமை முதல்

**வின்ஸர் - யாழ்ப்பாணம்**

தினசரி 4 காட்சிகள்

அளவுக்குமேல் பணம் வைத்திருந்தால் அவனும் திருடனும் ஒன்ருகும்.
வரவுக்குமேல் செலவுகள் செய்தால் அவனும் குருடனும் ஒன்ருகும்.
களவுக்குப் போகும் பொருளையெடுத்து வறுமைக்குத் தந்தால் தருமமாகும்
என்ற நல்ல தத்துவங்களை விளக்கும் சிறந்த சமூகச் சித்திரம்.

★ ஜெமினி கணேசன் ★ சௌகார் ஜானகி
★ ஏ. வி. எம். ராஜன் ★ நிர்மலா
★ நாகேஷ் ★ மனோரமா ★ சுந்தரராஜன்
★ வசந்தா ★ வி. எஸ். ராகவன்
★ ஓ. ஏ. கே. தேவர் ★ எம். ஆர். ஆர். வாசு

நடித்தது

# சக்கரம்

சிறுகதை

# கௌரவப் பிரச்னை

— நா. முருகதாஸ் —

அது கிராமத்தின் அமைதியை இன்னும் இழக்கவில்லை. நகரத்தின் பரபரப்பும் முற்றாக அங்கு ஏற்படவில்லை கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடைப்பட்ட ஒரு சிற்றூர் அது. பழங் காலத்திலே சிறிய குடியிருப்புக்கள் ஒவ்வொன்றும் கோவில்களை நடுநாயகமாகக் கொண்டே விளங்கின இன்றும் நம்நாட்டில் கோயில்லா ஊரைக்காணமுடியாது. இந்த இயற்கைக்கு விரோதமில்லாமலே அந்த ஊரும் முருகப்பெருமான் ஆலயம் ஒன்றை மையமாகக் கொண்டிருந்தது. கிராமம்நகரைநோக்கி வளர்வது போல அந்தக் கோவிலும் படிப்படியாகப் புதிய மண்டபங்களால் வளர்ச்சியுறுகின்றது. புதிய மண்டபங்களில் சின்னத்தம்பி உடையார் என்ற பெயர் கொட்டை எழுத்துக்களில் காணப்பட்டது அவ்பணக்காரர் தான். சின்னத்தம்பி உடையார் உடையார் வேலை இல்லாமற் போன பின்பும் சின்னத்தம்பியார் பரம்பரைப் பெயராக அதைக்கொண்டிருந்தார். அதனால் அவர் பெருமையும் அடைந்தார். அந்தக் கோவில் உற்சவம்தான் அவ்வூர் மக்களால் பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு ஆகிய பண்டிகைகளிலும் பார்க்க மன நிறைவுடன் கொண்டாடப்படுவது. அதில் பத்தாம் திருவிழா சின்னத்தம்பி உடையார் உபயம் திருவிழா ரசிகர்களிடையே சின்னத்தம்பியார் ஒரு மகானுக உயர்ந்து நின்றார். ஏனென்றால் அவரது திருவிழா பலவித கேளிக்கைகளுக்கும் இடமாயமைவதோடு விடிய விடிய நடக்கும் மஹோற்சவமல்லவா? அத்துடன் வருடாவருடம் இந்தியாவிலிருந்து இதற்கென்றே விசேடமாக மேளம் வரவழைப்பார் உடையார். இதனால் வெயூர்களிலிருந்து கூடப் பலர் 'கார்' பிடித்துக் கொண்டுதிருவிழாப் பார்க்க வருவார்கள் அவரது திருவிழாவிற்குச்சனம் வருவதற்காகத்தானே அவர் அவ்வளவு செலவு செய்கிறவர். திருவிழா 'சீசனி'ல் சின்னத்தம்பி உடையாரதுபேரும் அவரது திருவிழாவும் பலரது வாயிலும் நர்த்தனம் புரியும். இவ்வாறு உடையார் கோவிலையும் திருவிழாவையும் தனது சுயவிளம்பரக் கருவியாகவே கருதிவந்தார்.

பூசை முடிந்ததும் உட்பிரகாரத்தில் இருந்த கருங்கல் ஒன்றில் அமர்ந்தவண்ணம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார், சுந்தரக்குருக்கள். அவரைத் தாண்டிப் போவோராலும் வருவோராலும் அவரது சிந்தனை தடைப்பட்டது. மடியிலிருந்து வெள்ளிப் பொடிடப்பியை வெளியிலெடுத்து 'சர்' என்ற சப்தத்துடன் ஒரு சிட்டிகையை மூக்கினுள் செலுத்திவிட்டு நிமிர்ந்தவர் முன்னால் இரு கரங்கள் நீண்டன. அக்கரங்களுக்குரியவனை நிமிர்ந்து நோக்கிய குருக்கள் புன்முறுவலுடன் அக்கரத்தில் பொடிடப்பியை வைத்தார். அவ்வளவு உரிமையுடன் அவரிடத்தில் பொடிவாங்குவது சண்முகத்தைத்தவிர வேறுயாராக இருக்கமுடியும். சண்முகம் தான் அந்தக்கோவிலின் கோயில் மேளம் குருக்களுக்கும் சண்முகத்திற்கும் சமவயதுதான் இருக்கும். இருவரும் நெடுநாளைய நண்பர்கள் உயிர் நண்பர்களும்கூட. சண்முகம் நாதசுரத்தில் ஓரளவு கெட்டிக்காரராக இருந்த பொழுதிலும் பரம்பரை உணர்ச்சி உந்தியதாலே தான் அங்கு கோயில் மேளமாக அமர்ந்திருந்தார். அத்துடன் ஊர்மக்களிடையே நல்ல மதிப்பும் செல்வாக்கும் இருந்தது. சண்முகம் தான் முதலில் பேசத் தொடங்கினர். "ஐயா இன்றையான் திருவிழாநோட்டீசைப் பார்த்தியளோ. எப்படி இருந்தது"

"என்னப்பா புதினமாகக் கேக்கிற? வழக்கம்போல நல்ல விளம்பர மாத்தானே வெளிவந்திருக்கும். அந்த இந்தியமேளத்தின்ர படத்தோடை யெல்லோ இருக்கு. ஆனு நோட்டீசிலை முன்னுக்கு கோவில் மேளத்தின்ரை பேர் எல்லே போடுறது. இதுலை காணவில்லைப் போலை கிடக்கு கவனிச்சியே" என்ருர் குருக்கள். "அதுதான் ஐயா கேட்டன் நோட்டீஸ் எப்பிடி எண்டு" என்றவாறு சண்முகம் தொடர்ந்தார். "உடையாற்றை இளைய மகளின்ர கலியாணத்துக்கு நான் கோவிலிலை ஏதோ அபிஷேகமெண்டு போகேல்லை அதுக்குப்பிறகு அந்தாள் தெருவிலை கண்டால் கூட முகத்தைத்திருப்பிக் கொண்டு போய்விடும். அந்தக்கோபத்திலை தான், இவர் நோட்டீசிலை என்ரை பேரைப் போடாமல் விட்டிருக்கிருர். அதுதான் சங்கதி" இதனைச் சொன்ன சண்முகத்தின் முகம் விகாரமடைந்து கோபம் கொப்புளித்தது. "ஐயா இவை கோயில் மேளமெண்டால் ஏதோ கிள்ளுக் கீரைபோலை நினைச்சிருக்கினம். எங்களுக்கும் மானம்இருக்கு ரோசம் இருக்கு என்று இன்றைக்குக் காட்டத்தான் போறன். உடையார், சண்முகத்திலை இருக்கிற தனிப்பட்ட கோவத்துக்கு கோயில் மேளத்தையே அவமதிக்கிருர். இதைச் சும்மாவிடமாட்டேன் என்றவாறு விருட்டென்று எழுந்து சென்ற சண்முகத்தையே வைத்தகண் வாங்காது உருவம் மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தார். சாதாரணமாகச் சண்முகத்துக்குக் கோபம் வந்து குருக்கள் பார்த்ததில்லை. அதனால் ஆச்சரியமடைந்தார் "சாது மிரண்டால்காடுகொள்ளா" தென்பர். சாதுவான சண்முகம் மிரண்டிருக்கிருன் என்ன அனர்த்தம் நிகழப் போகிறதோ என்று மனதில் நினைத்தவாறு அவ்விடமகன்ருர்.

கீரிமலை ஆடிஅமாவாசையன்று எப்படி சனக்கூட்டத்தால் நிறைந்திருக்குமென்று அறியாதவர்கள் அன்று கோவிலுக்கு வந்திருந்தால் அறிந்திருப்பார்கள். அவ்வாறு கூட்டம் அடித்துவிலக முடியாதபடி நிறைந்திருந்தது. சனக்கூட்டம் வெளிவீதியிலேதான் நின்றிருந்தது. எல்லாரும் திருவிழாப் 'பார்க்க' வந்தவர்கள் தாமே. கோயிலினுள் அவ்வளவு சனம் இருக்கவில்லை. இரவைப்பகலாக்குவதென்பார்களே — அந்தவித்தை கோயில் வெளிவீதி முழுவதும் கையாளப்பட்டிருந்தது. பெரிய பெரிய சிகரங்கள் மாடமாளிகைகளை நினைவூட்டின சிகரங்கள் வெறும்பார்வைக்குத்தானே மாளிகைகள். அவை உடையாரின் மனநிலை பிரதிபலிப்பதுபோல்அமைந்திருந்தன. பலநிற மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகள் கம்பர் காட்டும் இராமாயண அயோத்தி போன்று விளங்கின. பத்தாம் வகுப்பில் இலக்கியம் படிக்கும் மாணவர் யாராவது அங்கு நின்றிருந்தால் பண்டிதர் விளங்கப்படுத்திய அயோத்தி இதைவிட அழகாக இருந்திருக்குமா என்று சந்தேகம் கொண்டிருப்பர். கன்னியர் ஒருபால் நின்றிருந்தனர். பெட்டியின் அடியில் கிடந்த கூறைப் புடவைக்கும் இதுபோல வருடத்திற்குஒருமுறையோ அல்லதுஇருமுறையோதான் வெளியுலகைப் பார்க்கச்சந்தர்ப்பம் கொடுக்கிருேம் என்பதுபோல தாய்மார் ஆங்கொருபால் நின்றிருந்தவர். திருவிழாமீது பக்தி கொண்டு (கடவுள் மீதல்ல) நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதற்காக வந்தவர் போல 'டெரிலின் சேட்'டும் பட்டு வேட்டியுமாக காளையர் கூட்டம் மற்றொருபால் சூழ்ந்தது. இவ்வாறு நெரிசலிலே பலர் ஆனந்த மனுபவித்துக்கொண்டு நின்றதை கண்குளிரப் பார்த்தவராக தனது திருவிழாவின் மகிமைதான் இத்தனை கூட்டத்தை இங்கு வரவழைத்தது என்ற பெருமிதத்தில் ஏறுநடை போட்டவண்ணம் தமது சகபாடிகள் சூழ வீதியுலாவந்தார் சின்னத்தம்பி உடையார். இப்படி அவர் வருகையிலே அவருடன் ஏதாவது கதைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் வந்து "மொத்தமாக எத்தினை 'ஸெற் மிசின்' பிடிச்சனியன்" என்று கேட்டுக்கொண்டு அவர்களுடன் கலந்தார் முத்துக்குமாரர். அவர்தான் பதினொராந் திருவிழாக்காரர். அவருக்கு சின்னத்தம்பி உடையார் போல் பெரிதாகத் தன்னால் திருவிழாச் செய்ய முடிவதில்லை என்பதனல் அவர் மீது பொருமை உண்டு. ஆனால் வெளிக்காட்டுவதில்லை அவரே அப்படித் தொடக்கிவிட்டால் பிறகு உடையாரைக் கேட்கவேண்டுமோ. "கீ" கொடுத்த விளையாட்டுக்காரர் ஓடுவது போல் உடையாரும் தனது திருவிழாவின் பெருமைகளைக் கூறத் தொடங்கிவிட்டார். "மொத்தமா எட்டு 'ஸெற் மிசின்' காணும் வந்திருக்கு. ஒவ்வொன்றுக்கும் முந்நூறு ரூபாயெல்லோ பேசி இருக்கு. இப்படி 'ஸெற் மிசினி'லை தொடங்கி சின்ன மேளம், சிகரம், பெரிய மேளம் எல்லாத்தைப் பற்றியும் 'மைக்' இல்லாமலே பெருங்குரலில் ஜம்பமடித்துத் தீர்த்தார். அவரது 'ஆமாம்சாமிகள்' எல்லோரும் வாயைப் பிளந்தவண்ணம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இப்படி தனது பெருமையைத்தானே சொல்லுவதில் ஒருவிதமான திருப்தி அவர் நெஞ்சைக் குளிர்வித்தது. முத்துக்குமாரருக்கு நாளையத் திருவிழா இதன் பத்தில் ஒருபங்குகூட வராதென்பதால் கவலையும், தானும் விடக்கூடாது என்ற எண்ணமும் ஏற்பட்டது.

பிரசங்கம் முடிந்ததும் மேளக்கச்சேரி நடைபெறும் என்று ஒலிபெருக்கி அறிவித்தது. 'ஏயர்கோன் கலிக்காமரின் கதையைத் தமது திறமையெல்லாவற்றையும் திரட்டி கூறிவிட்டுப் பிரசங்கியார் பிரசங்கத்தை முடித்துக் கொண்டார். கோயிலிலிருந்து கூப்பிடு தொலைவில் உள்ள வீட்டுத் திண்ணையில் சண்முகம் படுத்திருந்தவாறே பிரசங்கத்தைச் செவியுற்று ஏயர்கோனின் பிடிவாதத்தை மனதிலே மெச்சிக்கொண்டார்.

'இனி மேளக்கச்சேரி தானே எல்லோரும் மேடைக்கு வந்திட்டினமோ எண்டு பார். இஞ்சை வா! இஞ்சை வா! விஷேட மேளம் அடிக்கிறதுக்கு முன்னம் கோயில் மேளம் அடிக்கெல்லே வேணும். ஓடிப்போய்ச் சண்முகத்தைக் கூட்டிக் கொண்டுவா இதுக்கெல்லாம் சண்முகம் ரெடியாக நிற்பான் இண்டைக்கெண்டு காணவில்லை' என்று பழைய வழக்கத்தில் ஊறிய சின்னத்தம்பி உடையார் தனது மகன் தியாகுவை விரட்டினர். ஓடிப் போய் கோயில் முழுவதும் சல்லடை போட்டுச் சலித்துக் களைத்து தவித்துப்போய் தகப்பனிடம் 'ஒரு இடத்திலையும் சண்முகத்தைக் காணேல்லை அப்பு' என்று தியாகு சொன்னன். அதற்கிடையில் மேளம் பார்க்க வந்தவர்கள் ஆரவாரமிட்டு நேரம் போவதை அறிவித்தனர். சின்னத்தம்பியாரும் கோயிலுக்குள் போனுர். போனவர் சுந்தரக் குருக்களிடமே 'சண்முகத்தைக் கண்டியளோ' என்று விசாரித்தார். அதற்கிடையில் தியாகுவும் சிலரும் சண்முகத்தைத் தேடிக்கொண்டு சண்முகத்தின் வீட்டுப்பக்கம் போனுர்கள் சுந்தரக் குருக்களிடமிருந்து விஷயத்தை அறிந்த சின்னத்தம்பியாருக்கு மீசை துடித்தது கோபத்தால் வாய் குழறியது. அவரது கோபாவேசக் கோலத்தைக் கண்டு சுந்தரக் குருக்கள் திகைத்துப் போனுர். மனுசன் எதுவும் செய்யக் கூடியவராயிற்றே!

தியாகு சண்முகத்தின் வீட்டுப் படியில் ஏறி 'சண்முகம்' என்று கூப்பிட்டவாறு சென்றுன். திண்ணையில் படுத்திருந்த சண்முகம் 'என்ன தம்பி!' என்று கேட்டுக் கொண்டே எழுந்து வந்தான். 'என்ன சண்முகம் கோயில் முழுவதும் உங்களைத் தேடிக் கண்டு பிடிக்கேலாமல் போச்சு. அங்கே மேளக்கச்சேரிக்கு ஆயத்தம்

10-ம் பக்கம் பார்க்க)

இன்றே வருக! நன்றே கொள்க!!

தங்க, வைர நகைகள்

வியாபாரத்தில்

முன்னணியில் நிற்கும் சிறந்த

நாணயமுள்ள ஸ்தாபனம்

ராணி

ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

மனேஜர்: A. KARAPUTUGALA.

"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்

★ ஸ்போட் சேட்

★ ரி சேட்

★ ரெறி சேட்

★ ரெறி பிளவுஸ்

★ பேபி வெஸ்ட்

★ கால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74A, கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம்.

போன்: 330

# பனம் பொருளிலிருந்து பலவித கைத்தொழில்கள்

செ. மயில்வாகனம்

இலங்கைவாழ் மக்களுக்கு இறைவனளித்த இயற்கைச் செல்வங்களில் மிக முக்கியமானது பனை. அடியிலிருந்து முடிவரையும் உள்ள பனையின் அத்தனை பாகமும் மனிதனுக்குப் பயன்படக் கூடியது.

## பனையின் அன்றைய நிலை

அன்று வாழ்ந்த எமது முன்னோர் பனையிலிருந்து பெறக்கூடிய பயன்கள் எல்லாவற்றையும் பெற்றுச் சந்தோஷமாக வாழ்வு நடாத்தினர். உணவுக்கும் உறையுளுக்கும் (வீட்டுக்கும்) வாழ்வுக்கு வேண்டிய தொழில்களுக்கும் பனை அவர்களுக்கு வழி காட்டியது. அரிசிக் கட்டுப்பாடோ, தட்டுப்பாடோ, வேலையில்லாத் திண்டாட்டமோ அன்றைய மக்களுக்குத் தெரியாது. பசியையும் வறுமையையும் போக்கிய பனையாகிய கற்பகதருவை மேலும் மேலும் உற்பத்தி செய்து அவர்கள் பேணி வளர்த்துவந்தனர்.

## பனையின் இன்றைய நிலை

இத்தகைய சிறந்த பனையின் பயனை அனுபவிக்கும் நிலை இன்று குன்றிவருகின்றது. பனையைப் பேணுவாரைக் காணமுடியவில்லை. உள்ள மரங்களும் வீடுகள் கட்டுவதற்காகத் தறிக்கப்படுகின்றன.

விஞ்ஞானமும் புதிய கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியடைந்துவரும் இந்நாளிலே பனம் பொருள்களில் அவை பயன்படுத்தப்படாமை கவலைக்குரியது. பட்டம் பெற்ற மேதைகள் எத்தனையோ பேர் எமது நாட்டில் இருந்தும் பனம் பொருள்களிலே புதிய கண்டு பிடிப்புகளையும் ஆக்கப் பொருள்களையும் எம்மாற் காணமுடியவில்லை.

## மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சி

இந்நிலையிலே பனை வளத் தொழிலுற்பத்தி பற்றி ஆலோசனை கூறுவதற்கு ஒரு சபையை அரசினர் நியமித்துள்ளமை மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியதொரு செயலாகும். இச்சபையின் ஆலோசனைகள் பனையின் வரலாற்றிலே ஒரு பொற்காலத்தை உண்டாக்கும் என மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றனர். இனிப் பனைமரத்திலிருந்து பெறக்கூடிய பயன்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

## மட்டையும் நாரும்

பனைமட்டை இன்று ஒரு எரிபொருளாகமாத்திரம் பயன்படுகின்றது. எமது முன்னோர் வரிச்சுகளுக்கும் அதை உபயோகித்தனர் பனைமட்டையின் நாரை வேலி கட்டவும் குடில் வரியவும் பயன்படுத்தினர்.

பனை மட்டையையும் அதிலிருந்து பெறக்கூடிய நார், தும்பு ஆகியவற்றையும் உரிய முறையிலே தொழிற்படுத்தினால் பெரும் பயனைப் பெற முடியும். தெருவேலை, கட்டடவேலை, வாய்க்கால் வேலை முதலியன நடைபெறுமிடங்களில் நார்க் கடகங்கள் பெரிதும் உபயோகப்படுகின்றன. ஆயினும் இக்கடகங்கள் வியாபார நோக்கத்துடன் ஆக்கப்படுவதால் விரைவிலே சிதைந்துவிடுகின்றன. ஏற்ற தொழில் நுட்பங்களுடன் இக்கடகங்கள் ஆக்கப்படுமானால் உயர்ந்த தரமுடையனவாயமைவதுடன் இலங்கையின் பல பாகங்களிலும் பெரும் வரவேற்பையும் பெறும்.

இக்கடகங்களை ஆக்கும் போது நாரைப் பதஞ் செய்து கீறி எடுப்பதற்கே கொஞ்சம் சிரமமேற்படும். இதற்கென இலகுவான கருவிகள் ஆக்கப்படுமானால் வேலை இலகுவாவதுடன் கடகங்களின் தரமும் உயரும். கடகத்துக்குவேண்டிய அகலத்தில் நாரைக் கீறும் போது கழிக்கப்படும் அகலங் குறைவான நார்க்கீறுகள் இடியப்பத்தட்டுப் போன்ற பொருள்களை ஆக்குதற்கும் உபயோகிக்கப்படலாம்.

பொருள்களை இட்டுச் செல்ல உதவுங் கைக்கூடைகள் அழுக்குத்துணிக் கூடைகள், குப்பைக் கூடைகள் ஆகியவற்றையும் பனை நாரினாற் செய்ய முடியும். நாருக்குச் சாயமூட்டிப் பொருள்களைச் செய்தால் அவை அழகமைந்த கலைப்பொருள்களாயும் மாறிவிடும். இதற்குச் சிந்தனையும் செயற்திறனும் வாய்ந்தவர்கள் வழிகாட்டவேண்டும்.

## தொழில்களில் பயிற்சி

இத்தகைய தொழில்களில் மக்களுக்குப் பயிற்சியளிக்கப்படவேண்டும். அதன் பின்னர் இத்தொழில்களை அவர்கள் வீடுதோறும் குடிசைத் தொழிலாகவும் செய்யலாம். ஊர்கள்தோறும் மத்திய தொழில் நிலையங்களையமைத்து எல்லோருங் கூடி அங்குஞ் செய்யலாம்.

நாரை முறுக்கி மிகவும் பெலம்வாய்ந்த கயிறுகளையும் ஆக்கமுடியும் பனைமட்டையினுட்புறத்திலுள்ள வெள்ளைத் தும்பைக் கொண்டும் நல்ல கயிறுகளை முறுக்கலாம். இவ்வெள்ளைத் தும்பு வேறு பொருள்களை ஆக்கவும் பயன்படுமா என்பது ஆராய்ச்சிக்குரியது.

பனைமட்டையின் அடிப்பக்கம் கங்குமட்டை என்று சொல்லப்படும். அம்மட்டையின் கவர்பட்டபாகத்தின் உள்ளே கருமையான தடித்த தும்பு இருக்கின்றது. தார்த் தெருக்களைக் கூட்டிச் சுத்தம் செய்வதற்கு உபயோகிக்கும் "பிறஸ்"களைச் செய்வதற்கு இக்கரிய தும்புகள் உதவும். முற்காலத்தில் மட்டைகளை அடித்து இக்கறுத்தத்தும்பை மக்கள் விற்பனை செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

## பனை ஓலையும் பன்னத்தொழிலும்

பன்னத்தொழிலை அழகாகச் செய்வதற்குப் பனையோலை போன்ற சிறந்த முலப்பொருள் வேறு இல்லை. யாழ்ப்பாணப் பகுதியிலே பன்னத் தொழிலுக்கெனப் பயிற்சிப் பாடசாலையொன்றும் இருக்கின்றது, ஆயினும் அத்தொழிலைப்பற்றிய அறிவு மக்களிடையில் நன்றாகப் பரவவில்லை சில ஏழைப்பெண்கள் மாத்திரம் சாதாரண பாய்களையும் உமல்களையும் சீவனோபாயமாகச் செய்கின்றனர். பன்னவேலையிற் பயிற்சி பெற்றவர்கள் அத்தொழிலைச் சீவனோபாயமாகச் செய்கின்ற நிலை இன்னும் ஏற்படவில்லை. நுட்பமான பன்னத்தொழிலுக்கு ஏற்ற வருமானங் கிடைக்கத் தொடங்கினால் அவர்களும் ஊக்கங்காட்ட முன்வரலாம்.

பனையோலையினால் எத்தனையோ விதமான பெட்டிகள், கடகங்கள், தட்டுகள், கைப்பைகள், தொப்பிகள், கூடைகள் செய்யலாம். இவ்விதம் ஆக்கப்படுகின்ற அழகான பன்னப் பொருள்களுக்கேற்ற பிரசாரம், விற்பனை வசதிகள் செய்யப்படவேண்டும்.

பன்னவேலையறிவு பனையுள்ள கிராமங்களெங்கும் பரவ வேண்டும். அதற்காகக் கிராமங்கள்தோறும் நிரந்தரமாகவோ தற்காலிகமாகவோ பயிற்சி நிலையங்கள் இயங்கி மக்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பன்னத்தொழிலும் அதுபற்றிய அறிவும் பனையுள்ள பகுதிகளிலே வளருவதற்கு அரசாங்கம் இன்னொரு முறையையும் கைக்கொள்ளுதல் பொருத்தமாயிருக்கும். பாடசாலைகளிலே ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குக் கைப்பணிப் பாடவேளைகளில் பன்னத்தொழிலைக் கட்டாயபாடமாகப் பயிற்றும் முறையைக் கொண்டு வரலாம். இதற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் பன்னவேலையாசிரியர் ஒவ்வொருவர் நியமிக்கப்பட வேண்டும். அல்லது ஆசிரிய கலாசாலைகளில் ஆசிரியைகளுக்குப் பன்னத் தொழிலிலும் உயர்ந்த பயிற்சியளித்து அவர்கள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு இத்தொழிலைப் பழக்கலாம்.

இவ்விதம் பன்னவேலையும் அதுபற்றிய நுட்பமான அறிவும் பரவி வளர்ந்தால் பன்னப் பொருள்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் வந்து காட்சி கொடுக்கும். பனைகள் நிறைந்த யாழ்ப்பாணப் பகுதிக்கு வருகின்ற வெளியூரவரும் வெளிநாட்டவரும் பன்னப் பொருள்களின் அழகிலே மயங்கி அவற்றை வாங்கிச் செல்லுகின்ற நிலைமையும் வரும். பன்னவேலைப்பொருள்கள் செல்லுகின்ற நிலைமையும் வரும் பன்னவேலைப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்ற காலமும் வரலாம்.

## பனையின் ஈர்க்கும் பயனும்

வீடு வேயும்போது கிடுகுகளைக் கட்டவும் சுளகு பின்னவும் துலாக்கொடிக்கான கயிறு பின்னவும், உறிகளை ஆக்கவும் பனையீர்க்குப் பயன்படுகின்றது.

இளம் ஈர்க்கிலே கைத்திறனுடன் பின்னப்பட்ட சுளகுகளுக்கு எல்லாப்பகுதிகளிலும் நல்ல வரவேற்பிருக்கின்றது. இத் தொழிலும் ஒரு பகுதியரிடம் பரம்பரை பரம்பரையாகப் பழக்கத்தின் மூலம் வந்துகொண்டிருக்கிறது.

சமுதாய மாற்றங்களினாலும் கூடிய வருவாயுள்ள வேறு தொழில்களைத் தேடிக் கொள்ளுவதாலும் இத் தொழிலைச் செய்வோர் தொகையும் குறைந்து வருகின்றது. இத் தொழிலை அழியவிடாமற் பாதுகாப்பதோடு பலருக்கும் பயிற்சியளித்து இதை இன்னும் வளர்க்கவும் வேண்டும்.

பனையீர்க்கைக் கொண்டு சிறுவருஞ் செய்யக்கூடிய இலகுவான தொழில் வெங்காயக்கூடு பின்னுதல். இது ஒரு சிறிய தொழிலாகத் தோற்றினும் எல்லோரும் இலகுவிற் செய்யக் கூடியது அன்றன்றைய தேவைகளுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கக் கூடியது. நெடுந்தீவில் இத் தொழில் மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கின்றது. பெரியவர்களுக்கு அவர்களின் குடும்பச் செலவுக்குக்கை கொடுக்கின்றது.

இத்தொழிலைப் பனையுள்ள பகுதியெல்லாம் பயிற்ற வேண்டும். அதனால் அங்குள்ளோர் ஒரு வருவாய் பெருக வேண்டும்.

பனம்பாளையிலிருந்து கள்ளும் கருப்பநீரும் பெறப்படுகின்றன. கருப்பநீரிலிருந்து பாணி, பனங்கட்டி, பனங்கற்கண்டு என்பன கிடைக்கின்றன. கருப்பநீரிலிருந்து சீனி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவது அவசியமானது. இவ்விதம் உண்டாக்கப்படும் சீனியின் உற்பத்திச் செலவு குறைவாகவேயிருக்கும். கரும்பு உற்பத்திக்காகச் செய்யும்

## பாளையாற் பெறக்கூடிய பயன்கள்

செலவு இதற்கில்லை. (பிற நாட்டுக் கம்பனியொன்று பொலிகண்டி என்னுமிடத்திலே முன்னர் சீனி செய்தமை அறியக் கிடக்கின்றது.)

பனங்கள்ளு, பனங்கற்கண்டு ஆகியன சில நோய்களையுடையவர்களுக்குக் குணத்தைக் கொடுக்கின்றன. இவற்றிலாராய்ச்சி நடத்தப்படுமானால் பல நல்ல பெறுபேறுகளையடையலாம்.

## பனம்பழம்

பனம்பழம் பனாட்டையுதவுகின்றது. பனம்பழத்திலும் பனாட்டிலும் தேக வளர்ச்சிக்கும் உறுதிக்கும் ஏற்ற சத்துக்கள் இருக்கும் என எண்ணக்கிடக்கிறது. இவற்றையாராய்வது பயனுடையதாயிருக்கும். பனம்பழத்தையும் பனாட்டையும் உண்பது நாகரிகமற்றதென்ற எண்ணம் இக்கால மக்களிடமிருக்கின்றது. (ஆனால் கள்ளுண்பதை நாகரிகமாக எண்ணுகின்றனர்).

பனம்பழச் சாற்றிலிருந்து புதுமையான உணவுப் பண்டங்கள் ஆக்குவதற்குச் சிந்தனை செலுத்தப்படவேண்டும். வசாவிளான் என்னுமிடத்திலுள்ள கிறிஸ்தவ ஆச்சிரமத்தில் பனம்பழத்திலிருந்து தயாரித்த குளிர் பானம் போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனையாகின்றது. பனம்பழத்திலிருந்து பழப்பாணி செய்யவும் முயற்சியெடுக்கப் படல்வேண்டும்.

## பனம்விதை

பனம்விதையிலிருந்து உண்டாகும் கிழங்கு நமக்குப் பெரும்பயனளிக்கிறது. பனங்கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல் என்பன எமது முன்னோரின் உணவில் முக்கிய இடம்பெற்றன, இப்பொருள்களிலுள்ள விசேட தன்மைகளும் ஆராயப்பட வேண்டியன. ஒடியற் கூழ் மலச்சிக்கலைப்போக்கும் சிறந்த நிவாரணியாகும். இதை மருந்துப்பெயர்போலக் கூற விரும்புவோர் தாலமூல சூறணகஷாயம் எனச்சொல்லுவர் (தாலம் பனை- மூலம் - கிழங்கு. சூறணம் - பொடி. மாகஷாயம் - கூழ்)

## பனந்தடியும் கைத்தொழிலும்

கிணற்றுத்துலா, வண்டித்துலா, வீட்டு மரங்கள் ஆகியவற்றுக்குப் பனைமரத்தை உபயோகிக்கின்றனர். வேறு பொருள்களைச் செய்வதற்குப் பனைமரத்தை உபயோகிக்கலாம். ஆனால் வேலைக்குச் சிரமமாவதுடன் அதிக லாபத்தையும் கொடுக்க மாட்டாது. ஆயினும் பனந்தடியினால் ஆக்கப்படும் பொருள்கள் நீண்டகாலத்துக்கு உபயோகப்பட


(9ம் பக்கம் பார்க்க)

யோகர் சுவாமிகள் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்

முச்சந்திக்குப்பையிலே எங்கள் குருநாதன்
முடங்கிக் கிடந்திடென்றான் எங்கள் குருநாதன்
அச்சமொடு கோபமில்லான் எங்கள் குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
பச்சைபுரவியிலே எங்கள் குருநாதன்
பாங்காக ஏறென்றான் எங்கள் குருநாதன்
தச்சன் கட்டாவீட்டிலே எங்கள் குருநாதன்
தாவுபரிகட்டென்றான் எங்கள் குருநாதன்
0 0
நாமேநாமென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
நமக்குக் குறைவில்லையென்றான் எங்கள் குருநாதன்
போமேபோம் வினையென்றான் எங்கள் குருநாதன்
போக்குவரவில்லையென்றான் எங்கள் குருநாதன்
தாமேதாமென்றுரைத்தான் எங்கள் குருநாதன்
சங்கற்பமில்லையென்றான் எங்கள் குருநாதன்
ஓமென்று றுதித்தான் எங்கள் குருநாதன்
ஊமையெழுத்தறியென்றான் எங்கள் குருநாதன்

# யப்பானியர் போற்றும் கோலம்




## கோலம் அழகுமட்டுமல்ல ஆரோக்கியமும் தருவது

எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தமிழ்ப் பெண்மணிகள் வீட்டைக் கோலமிட்டு அலங்கரித்து வைத்திருக்கும் வழக்கத்தைக் காணலாம். அதிலும் மார்கழி மாதத்தில் வீட்டு முற்றத்தில் கோலமிட்டு பிள்ளையார் பிடித்துவைக்கும் வழக்கம் தமிழரிடையே நெடுங்காலமாக இருந்துவருகிறது. தமிழரைப்போலவே ஜப்பானியர் வீட்டு அலங்காரங்களில் கோலமும் முக்கிய இடம் பெறுகிறது.

### கோலம் தோன்றிய காலம்

கோலம் தோன்றிய காலத்தைக் கண்டுபிடிப்பது எளிதில்லை. சரித்திர காலத்துக்குமுன் ஆதிமனிதன், பூஜையின்போது தரையில் உலர்ந்த குச்சிகளைக் கொண்டு பல விசித்திர உருவங்களை உண்டாக்கியிருக்கவேண்டும். பண்டைக் காலத்தில் கட்டிடச் சிற்பங்களில் பல 'டிசைன்'கள் செதுக்கிய கருங்கற்களைக் காணலாம்.

தமிழர்கள் பூஜைக்கும், ஹோமத்துக்கும், மற்ற விசேஷ சந்தர்ப்பங்களுக்கும் அழகான கோலங்கள் இட்டு அலங்கரிக்கிறார்கள். கோலங்கள் போடுவதனால் அந்த இடங்கள் ஒரு தூய்மையைப் பெறுகின்றன என்பது ஆன்றோர் கண்ட உண்மையாகும். மேலும், கோலங்கள் வீட்டுக்கு சிறந்த அலங்காரத்தைக் கொடுக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

### கோலம் ஆரோக்கியம் தரும்

கோலங்கள் போடுவதனால், ஆரோக்கிய முறையில் மற்றோர் உபயோகமும் இதற்கு உண்டு; பொதுவாக, முற்றத்தைக் கோமயத்தால் மெழுகி அதன்மேல் கோலம் இடப்படுகிறது. இதனால் வீட்டின் உட்புறம் செல்லும் தொற்றுநோய் பரப்புகிற கிருமிகளைக் கோலத்தில் உள்ள அரிசிமாவின் வாசனை இழுக்கும். அப்போது அந்தக் கிருமிகளை அங்கே வீசும் சூரிய கிரணங்கள் அழித்துவிடுகின்றன. அதுமாத்திரமல்ல, பசுவின் சாணமும் ஒருவகைக் கிருமிநாசினியாகும். அதுவே கிருமிகளை அழிக்கக்கூடிய தன்மை வாய்ந்ததாகும்' சுகாதார முறைப்படி சுத்தமாக வாழ்வதற்கும் இவை எமக்கு அனுகூலமாயிருப்பதனால் இக்கோலமிடும் முறை தமிழர் வழக்கிலிருந்து வருகிறது. இவற்றாலும் நம்முன்னோர்கள் கோலத்தை முன் வாயிலில் போடத் தொடங்கியிருக்க வேண்டும் என நாம் ஊகிக்க கூடியதாயிருக்கிறது. ஒய்வம் சிரத்தையும் உள்ள வீட்டுப் பெண்மணிகள், வீட்டைத் தூய்மையாகவும், அலங்காரமாகவும் வைத்திருக்க விரும்பும் பெண்மணிகள்; இந்த மார்கழிமாதம் முப்பது நாட்களும் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருகோலமாக இட்டு அழகுபடுத்தலாம்.

### இரண்டு விதமாய் போடலாம்

கோலங்கள் இரண்டுவிதமாகப் போடலாம், ஒன்று அரிசிமாவைத் தண்ணீரில் கரைத்து ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு ஒரு துண்டுத் துணியை அதில் அழுத்தி எடுத்து விரல்களுக்கிடையில் வைத்துக்கொண்டு மெதுவாக கோடிழுக்க; விரல்களின் வாயிலாக மா வழிந்து அலங்காரமாகக் கோலம் அமையும். இதைவிட. பட்டுப்போல அமைந்த காய்ந்த மாவை பெருவிரலினாலும், சுட்டுவிரலினாலும் சேர்த்து அள்ளி கோடிழுக்க மெல்லியதாகக் கோலம் அழகாக விழும். இந்த இருவகைக் கோலங்களையும் தமிழ்ப் பெண்மணிகள் பிரயோகித்துவருகிறார்கள்.

இதைவிட, பட்டுப்போன்ற சுண்ணாம்பைக் கரைத்துச் சிலர் கோலமிடுகிறார்கள். இது பளிச்சென்று வெள்ளையாக - பிரகாசமாக இருப்பதுடன் இலேசில் அழிந்துபோகாமல் நீண்ட நேரத்துக்கிருக்கும். சுண்ணாம்புடன் மாவையும் கரைத்து அழகான கோலமிட்டுப் பெண்கள் தம் கைவண்ணத்தைக் காட்டுகின்றனர்.

மார்கழி மாதம் பீடை பிடித்த மாதம் என்றும், கெட்ட தேவதைகள் உலாவும் மாதம் என்றும் பெரியவர்கள் கூறுவார்கள். இவைகளை அகற்றுவதற்கு வீட்டு வாயிலில் கோலமிடுவது சிறந்த உபாயமாகும்.

எனவே, வீடு சிறக்க நாடு செழிக்க பெண்கள் கோலமிடுவது நல்ல வரவேற்கக் கூடிய தொண்டாகும்.

இம்மட்டுமல்ல, தமிழரின் பாரம்பரிய வழக்கம்; இவற்றை நாம் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ்ப் பெண்மணிகள் கோலம்போடுவதை ஒரு கலையாகச் சொல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

— விமலா —



# செயற்கைப் பிரசவமும் சோதிடமும்

— செ. இரத்தினசபாபதி —

சென்ற நவம்பர் மாதம் வெளியான 'Readers Digest' என்னும் ஆங்கில சஞ்சிகையில் 'பகலில் மாத்திரம் பிரசவம்' என்னும் தலையங்கத்தின் கீழ் இயற்கைக்கு முரணான ஒரு செய்தியைப் படித்தேன். அமெரிக்காவில் உள்ள செண் லூயிஸ் (st Louis Barnes Hospital) என்னும் ஆஸ்பத்திரியில் பகலில் மாத்திரம் பிரசவம் நடத்துகிறார்களாம்: பிரசவகாலம் கிட்டிய கர்ப்பிணிகளின் பிரசவ தவணையின்படி பிரசவ தினத்தைக் கணக்கிட்டு நிச்சயித்து அவர்களின் தேகநிலையை நன்றாகப் பரிசோதித்து ஒக்ஸிரோசிஸ் (oxy tocin) ஊசிமருந்து போட்டும், மற்றும் சில நூதன சத்திர சிகிச்சை செய்தும் நோ உண்டாக்கி குழந்தைகளை முற்பகல் 9-00 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் இடையிலேயே பிரசவிக்க செய்கிறார்களாம். டாக்டர்கள் தாதிமார்கள் உட்பட யாவருக்கும் இதனால் இராத்தூக்கம் கெடாமல் இரவில் நன்றாகத் தூங்கக் கூடியதாக இருக்கிறதாம்.

இம்மாதிரியாக 700க்கு மேற்பட்ட குழந்தைகளைத் தாய்க்கோ சேய்க்கோ அபாயமில்லாமல் அந்த ஆஸ்பத்திரியில் பிரசவிக்கப்பட்டதாக இச்செய்தி பெருமையுடன் கூறுகிறது. இந்த ஒழுங்கின்படி நோவு காலம் 5 1/2 மணித்தியாலமேயாம். இப்படிச் செயற்கைப் பிரசவம் நடக்கும் இக்காலத்தில் ஜனனகால கிரகநிலை, லக்கினம் முதலியவற்றைக் கொண்டு கணிக்கப்படும் ஜாதகங்களின் கதி என்ன?

இம்மாதிரிப் பிரசவங்கள் எமது நாட்டில் நடந்தால்— வருங்காலத்தில் நடக்கக் கூடும், இப்படியாகப் பிறந்த ஆண், பெண்களின் ஜனனகால கிரகங்களின் நிலைகளைக் கொண்டு நக்ஷத்திரம், இராசு, இராசி, வேதை, வசியம் முதலிய விவாகப் பொருத்தங்களைப் பார்ப்பதில் அர்த்தம் உண்டோ?

இவ்வளவு காலமும் மனிதனால் மரணத்தை மாத்திரம் (கொலைசெய்து) உண்டாக்கக்கூடிய சக்தி இருந்தது. ஆனால் இன்றைய அணு விண்வெளி யுகத்தில் கெர்ப்பத்தை தேவையான காலத்தில் உண்டாக்கவும், அழிக்கவும், குறித்த நேரத்தில் பிரசவிக்கச்செய்யவும். விஞ்ஞான, மருத்துவ சத்திர சிகிச்சை அறிவு அளித்திருக்கிறது.

ஒருஜீவனுடைய உற்பத்தியும் பூமியில் அவதரிக்கும் நாளும், கோளும், வாழ்க்கை மறைவு யாவும் கர்மபலன் என்ற நம்பிக்கையை இத்தகையான செயற்கை சாதனங்கள் ஓரளவு தகர்த்துவிட்டபோதிலும் மனிதன் என்றும் இயற்கைக்கு அடிமையே.

இப்படியான அற்புத சாதனங்களும் கண்டுபிடிப்புகளும் இயற்கையின் தத்துவங்களை சிறிது முறியடித்துவிட்டபோதிலும், மனிதன் மனோபாவத்துக்கே உரித்தான பகுத்தறிவு. மனச்சாட்சி, இரக்கம், தன்மானம், எதுசரி. எதுபிழை என்று நிர்ணயித்து நீதியுடன் நடக்கும் தன்மை (Sense of justice) முதலிய நற்பண்புகளுக்கும் நற்குணங்களுக்கும் ஈடுகொடுக்கக் கூடிய, யந்திரமோ மந்திரமோ அணு சக்தியோ, மின்சக்தியோ (electronic Substitute) மருந்துகளோ மனிதனால் எக்காலத்திலும் கண்டுபிடிக்க இயலாது என்ற உண்மையை மாத்திரம் மனிதன் மறக்கக்கூடாது.

### வாழ்வு எப்போது இனிக்கும்

முட்டாளின் வாழ்வு முற்பகுதியில் இனிக்கும். புத்திசாலியின் வாழ்வு பிற்பகுதியில் இனிக்கும். கையில் பணம் வைத்திருப்பவனின் வாழ்வு இடையில் இனிக்கும். நெஞ்சில் துணிவு உள்ளவனின் வாழ்வு எப்போதும் இனிக்கும்.

### பலாப்பழம்போல் வாழுங்கள்

பலாப்பழம்போல் வாழவேண்டும். உள்ளே தனித் தனிச் சுளைகள் எத்தனை எத்தனையோ இருந்தாலும் ஒரே அமைப்புக்குள்ளே அவைகள் எப்படிக் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றனவோ அதைப்போல நமக்குள் எவ்வளவு பிரிவுகள் இருந்தாலும் ஒரே அமைப்புக்குள்ளே ஒருமைப்பாட்டுடன் நாம் வாழவேண்டும்.

### கோழையும் வீரனும்

கோழைக்கு அடிக்கடி கோபம் வரும். வீரனுக்கு ஒரே ஒரு தடவைதான் கோபம் வரும். அடிக்கடி கோபிக்கும் பழக்கமுள்ளவர்களை எதிர்த்தால் வெற்றி நமக்கு நிச்சயம் கிடைக்கும். எப்போதாவது கோபிக்கிறவர்களை நாம் எதிர்க்கக்கூடாது. அவர்களிடம் நாம் பணிந்துபோய்விடுவது நல்லது.

### டீ குடிக்கும் பழக்கம்

டீ குடிக்கும் பழக்கம் - 4702 வருடங்களாக இருந்துவருகிறது. முதன்முதலில் டீயைக் குடித்தவர்கள் சீனர்கள். அவர்கள் ஆரம்பகாலத்தில் தேயிலையைக் கொதிக்கும் நீரில்போட்டு தண்ணீரை வடிகட்டிவிட்டு தேயிலையைத் தின்றார்களாம்.

# நாவலர் உள்ளம் கவர்ந்த பொன்னுவெளி

பொங்கு தமிழ் யாழ்ப்பாண நகரையிடமாகக் கொண்ட பூநகரியின் தெற்கிலே எமதூராகிய பொன்னுவெளி அமைந்துள்ளது. எமதூர்ப் பெயரைப்பற்றிப் பாட்டிமார்களின் விசித்திரக் கற்பனைக் கதையொன்று உண்டு அதாவது தமிழகத்தில் இருந்து பொன்னன், கந்தன் என்ற பெயரையுடைய இரு நண்பர்கள் தோணி மூலமாக ஈழம் நோக்கி வந்தனராம். அவர்கள் இருவரும் எமதூருக்கு அணித்தாயுள்ள புளியந்துறை எனும் கரையோரத்தில் கால்வைத்தனர். அப்போது கந்தன் எமதூர்ப் பெருவெளியைக் கண்ணுற்று, பொன்னனை நோக்கிப் பொன்னு! வெளியடா! என்றானாம். இதனாலேயே எமதூருக்கு பொன்னுவெளி என்ற பெயர் ஏற்பட்டது என்பர். ஆனால் இது உண்மைக் கதையன்று. பாட்டிமாரின் வாய்வழிவந்த கட்டுக் கதையே.

எமதூர்ப் பெயருக்கும், எமதூருக்கும் சில பொருத்தங்கள் உண்டு. பொன்—ஆ—வெளி என்று எமதூர்ப் பெயரைப் பிரித்து நோக்கும்போது இலக்குமியையொத்த பசுக் கூட்டங்கள் மேயும் வெளியெனப் பொருள் கொள்ளலாம். எமதூரிலும் ஏராளமான பசுக்கள் காணப்படுகின்றன. எமது பகுதிக் கிராமசபைக்கு முக்கிய வருமானத்தை பசுச்சாணம் தற்பொழுதும் அளித்துவருகின்றது.

இங்குள்ள மக்கள் தம் பிரதான தொழிலாக விவசாயத்தைக் கொண்டவர்கள். இங்குள்ளவர்களின் விவசாயம் சூதாட்டம் போன்றது. இங்கு வானத்தை நம்பிய மக்களை அது ஏமாற்றுவது சகஜம். பொதுவிற் கூறின் இங்குள்ளவர்களின் வாழ்வின் உயர்ச்சியை நிர்ணயிப்பது 'வானம் நோக்கிய பூமி' ஆகும்

### மக்களும் மதமும்

இங்குள்ள தொகையளவாற்சிறிய வேளாண் மரபு மக்கள், அறிவளவால் அனைவரும் பெரியவர்கள் எனலாம். இவர்கள் அனைவரும் சைவம் தழைத்தோங்கத் தம்மாலான உதவிகள் செய்துவருகின்றார்கள். கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம், சிவராத்திரி புராணம், நிகண்டு முதலியவற்றில் ஆர்வமும் பாண்டித்தியமும் உள்ள மக்கள் அநேகர் உண்டு இங்குள்ள பலருக்கு புராண பாராயணமும், பயன் சொல்லுதலும் கைவந்த கலையாகும். இக்கலை இங்கு வண்ணம்பெற வழியிட்டவர் நாவலர் அவர்கள் என்றால் மிகையாகாது. மேற்கூறிய புராணங்கள் இன்றும் கோயிலிற் பாராயணஞ் செய்யப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது. ஐப்பசித் திங்கள் கந்தசஷ்டி ஆறு நாளும், கந்தபுராண பாராயணமும், மார்கழித் திருவெம்பாவை நாட்களிற் திருவாதவூரர் புராணமும், மற்றும் சிவராத்திரியன்று சிவராத்திரி புராணமும் பாராயணஞ் செய்வார்கள், இவ்வூர் மக்கள். இப்பணி என்றும் வளர இறைவன் அருள் புரியட்டும்.

## எங்கள் கிராமம் – 6
## பொன்னுவெளி

### நாவலரும் நம்மூரும்

சைவங் காத்த நாவலரும் நம்மூரில் தனிப் பிரியமாம். ஏனெனில் எங்கள் ஊர்ச் சம்பா அரிசியும். தேனும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவை. இதனாற்றான் தமது சிவ பூசைக்காக தேனும் சம்பா அரிசியும் இங்கிருந்து பெற்றார் என நாவலர் மலர் இயம்புகின்றது. எமது ஊர் உடையாராகிய காலஞ் சென்ற சின்னத்தம்பி அவர்கள் நாவலரின் மனத்திற்கு உகந்த நற்சீடனுவார். இவர் நாவலரின் மாதிரி நிழற்படத்தை நாவலராகப் பேணிக் காத்து, துதித்து வந்தார். அந்நிழற்படம் இன்றும் அவர் வழியினராற் பேணித் துதித்துவரப்படுகின்றது. மேற்கூறிய சின்னத்தம்பி உடையார் அவர்கள் நாவலர் வேண்டுகோட்படி ஞர் வித்தியாசாலை ஒன்றை அமைத்து நாவலர் இட்ட நாமமாகிய சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற நாமத்தை இட்டருளினார். அவ்வித்தியாசாலையே இன்றும் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. எமது பகுதியிலேயே அனேகமான உத்தியோகத்தர்களையும், உயர் கல்வி பெற்றோர்களையும் உருவாக்கியுள்ள தென்றால் மிகையாகாது. சின்னத்தம்பி உடையார் அவர்கள் தமது மகன் குமாரசாமி அவர்களுக்கு நாவலரைக் கொண்டே வித்தியாரம்பஞ் செய்தார். நாவலர் கைப்பட எழுதிய வித்தியாரம்ப ஏடு இன்றும் அவர் சந்ததியினரிடம் உண்டு. நாவலர் அவர்கள் எம்மூ... செய்த பணி அளப்ப... அவர் செய்தபணிக்கு... நிக்கடனுகவே இ... புராண பாராயணஞ்... யப்பட்டுவருகின்றது... பர் முதியோர்

### இன்றைய நிலையு... வசதியினங்களும்

இவ்வாறு ... மே... வகையில் ... பலவகையில் பிர... பெற்று வி... னுலும் இன்றுபல... யீனங்களை உடை... உளது. அவ்வசதியீ... எம்மைபொறுத்த... கங்களைப் பொறுத்... யில் மிக முக்கிய... அவசியம் மிக வேண்... வதுமாகும். ... போக்குவரத்தும் ... மாகும். இவ்விரு... களும் ஒடு ... மையாதன. இ... போன்றன.

போக்குவரத்... பொறுத்தவரையிற்... ஆண்டு ஆரம்பிக்க... பிரதான வீதியொன்... றிம் பூர்த்தியாகாமல்... யாகவே காணப்ப... தென்றால் என்ன ... சொல்வது? பெ... எமதூர்ப் போக்கு... வீதிகள் அல்லைய... லேயர் ஆட்சியில் ... கப்பட்ட வாறேயு... சுதந்திரம் பெற்ற... வரையும் எதுவிதமு... றமும ... படுகின்ற... வது.

### பொன் – நித்தி

இத்தகைய சீர்... னல் ஆவ்லூர் மக்க... எட்டுமைல் தூரத்... நடையாக நடந்து ... சென்று பஸ் ஏற ... இக்கட்டிற் குள்ளா... கின்றுர்கள் என்று...

10-ம் பக்கம் பார்...

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

## தித்திக்கும் தேன் நிலவோ!

— ச. வே. பஞ்சாட்சரம் —

### 11. நச்சிப்பிச்சி!

''ஆண்டவனைக் காண வேண்டும்!
அன்று போலக் காண வேண்டும்!
மீண்டும் அந்த இசையில் மூழ்கி
விழிகள் பருகக் காண வேண்டும்!''

என்று நச்சி பித்தன் போல
எண்ணி எண்ணி அலைய லுற்றுன்!
என்றும் மாலை கொடியின் பாட்டில்
இணைந்து காண்பள் இறைவன் கோலம்!

பாரிசைப்பர் பாட்டி தென்றும்
அவ்வப்போது நினைவன்! தலைஇ
பாரி வீட்டில் கேட்ப தென்ற
அந்த நினைவு மட்டு முண்டு!

நச்சி மகிழ நாளும் நாளும்
தானி சைக்கும் அந்த இன்பப்
பிச்சை கிட்டல் போது மென்று
பெருமை கொண்டு கொடி மகிழ்வள்!

பாட்டைக் கேட்டு நிமிடந் தோறும்
பரமசிவனைக் காண வேண்டும்!
வாட்டி வந்த திந்த ஆவல்
வருவன் தினமும் அவளின் வீடு!

பாடி அவனை மகிழ வைக்கப்
பள்ளி செல்லும் கடமை விட்டு
நாடி வீட்டிற் காத்தி ருப்பள்
நாளும் பொழுதும் வீட்டில் அவளும்!

வானம் பொழிதல் பொய்க்க வில்லை
மண்ணும் வழங்கல் பொய்க்க வில்லை
தான தர்மம் நேர்த்தி தீர்க்கும்
தன்மை என்றும் தளர வில்லை

நச்சி முத்திப் பித்து மிக்கு
நாளும் பெருகி வந்த போது
பிச்சி யாகி நச்சி மீது
பேய்ச்சி யாகிக் கொடி தளர்வள்!

காலை யென்ன மாலை யென்ன
கனவி லென்ன நனவி லென்ன
வேலை நச்சி அருளிற் கேங்கல்
வேல் விழிக்குத் தேன்கொ டிக்கு!

ஒடுகு கைக்குள் துறவி நச்சி
ஒன்றி நிட்டை தனிவிருப்பன்!
அருகில் துறவி யாகக் கொடியும்
அமர்ந்தி ருப்பள் நிட்டை கூடி!

காட்டில் தபசுக் குடிசை ஒன்றுள்
கண்கள் மூடி அவனி ருப்பன்!
ஏட்டு மலர்க ளிட்டவ் வடியில்
ஏத்தி நிற்பள் கன்னி யோகி!

தண்டு கமண்ட லங்க ளோடு
தாடி மீசை குடுமி யோடு
தண்டுக் காவி யாடை யோடு
துறவி நச்சி நடப்பன் முன்னே!

(வளரும்)

# நாடகம் நடத்திப் பா...

கலைத்துறையில் நாடகத்துக்கு ஒரு தனியிடமுண்டு. அதுதரும் இன்பத்துக்கு ஈடிணையில்லை. ஆனால் அத்துறையில் ஈடுபட்டவன் அடையும்தொல்லை-கஷ்டம்-சிரமம் இருக்கிறதே அவை சொல்லில் அடங்காதவை.

### பிரதியும் நடிகரும்

நடிக்க ஒரு நாடகம்வேண்டும் என்ற முனைப்புடன் நல்ல பிரதியைத் தேடுகிறான் இயக்குனன். உயர்ந்த கருவை — சிறந்த உரையாடலை — நாடகப் பண்புமிகு பல்வேறு நிலைகளை — உச்சக்கட்டங்களை உடையதா நாடகப்பிரதியென ஆராய்கிறான். திருப்தி ஏற்படுகிறது. இருப்பினும் நல்லபிரதியைத் தேர்ந்தெடுத்த இயக்குனன்முன் தலைநீட்டுகிறது நடிகர் பிரச்சினை. தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகப்பிரதி, நடிக்க விரும்பியவர்களுக்குப் பொருத்தமானதா? இது முதல் பிரச்சினை. அர்ச்சுனன் போன்ற அழகு தேவைப்படுகிறது. ஆனால் வீமன்போன்றதோற்றம் உடையவன்தான் கிடைத்திருக்கிறான். முகம் நீளவேண்டும்; முழி அகல வேண்டும். ஆனால் சப்பை மூக்கும் சிறியகண்ணும்இயக்குனனுக்குத் தலையிடியைக் கொடுக்கிறது. சரி. இந்தப் பிரச்னையைத்தான் தீர்த்துவிட்டான். அறுபதுவீத திருப்தியும் கண்டுவிட்டான். எனினும், பெண் பாத்திரப்பிரச்சினை இருக்கிறதே, அதுதரும் தொல்லை போதும்போதும் என்றாகிறது. பெண்பாத்திரத்துக்கு பெண்ணையே போட்டுவிடுவோம் என்று துணிகிறான் இயக்குனன். 'மாஸ்டர் இப்ப பெம்பிளையளோடையும் நடிக்கத் துவங்கிவிட்டாரே! ஆ! ஆ!! என்ன சின்னமேளக் குஞ்சுகளோ! இல்லை ஒருமாதிரியான ......' கண்டனக்குரல் எழுப்புவோர் 'திருப்பணி வலுப்பெறுகிறது. 'சரியப்பா அழகான இளைஞனை, பெண்ணாக நடிப்பதில் சாமர்த்தியமுடையவனை நடிக்கவைத்துவிடுவோம்' என்கிறது உள்ளம். 'இருபதாம் நூற்றுண்டில் பெண் பாத்திரத்துக்கு ஆணு? இருபத்தைந்து ஆண்டுகள் பின்தங்கியஈழத்தமிழ் நாடக உலகம்' என்ற எழுத்துக்கள் விமர்சனப் பகுதிகளில் தலைகாட்டுகின்றன. பெண்பாத்திரத்தைப் பெண்நடிப்பதுதான் பொருத்தமானது என்பதை நன்கு உணர்ந்தவன் இயக்குனன். ஆனால் நடிக்க வல்ல நல்ல இடத்துப்பெண்ணைத் தேடியெடுப்பது மலையைக் குடைந்த கதை போலத்தான். நாடகமே என் பேச்சு; நாடகமே என் மூச்சு என்றெல்லாம் பேசுவார்கள். ஆனால் தமது உறவினரான பெண்களை ஆற்றல் இருந்தாலும் தடுத்துவிடுகிறார்கள் வட இலங்கையில் அதுவும் ஒருவகையில் சரிபோல் தெரிகிறது. ஏன் தெரியுமா? தற்செயலாய் நல இடத்துப் பெண் நடிக்க முன்வந்துவிட்டால் ரசிகர்குழாம் அவரது கலைபற்றிவிமர்சிப்பதைவிட 'பிறைவேற்' வாழ்க்கை பற்றிக்குடையும் ஆராய்ச்சிப்பெடுத்துரை ஆகிவிடுகிறது. இது ஒரு தனிப் பிரச்சினை; தலையிடிப் பிரச்சினை. என்ன செய்யமுடியும்?

— ஏ. ரி. பொன்னுத்துரை —

### ஒத்திகைப் பிரச்சினை

பிரதிதேடியாயிற்று. பொருத்தமான நடிகர்களையும் தேர்ந்தாயிற்று. அதைத் தொடரும் ஒத்திகைப் பிரச்சினை இருக்கிறதே அது இயக்குனனைப் பிய்த்தே தின்கிறது. மத்தியான ஒரு இடத்தில் ஒத்திகை எனத் தீர்மானிக்கப்பட்டு விட்டது. ஆனால் நேரத்துக்கு வருகிறார்களா நடிகர்கள். கதா நாயகன் ... தலைவர் ... டிலைச் சேர்த்த... நடிகர்களும் ... பாவகர்கள் ... ஏழுமணிக்கு ... றுன். நடிகர் ... மணி ... மாகிறார்கள். ... கர்களும் ... என்றுல் ... தான். ...

(9-ம் பக்கம் பார்...)

# ஈழத்தில் திறமையான கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதை 'குத்து விளக்கு' நிரூபிக்கும்



# 'குத்து விளக்கு' ஆனந்தன்!

ஈழத்தில் நல்ல நடிகர்கள் இல்லையென்ற குறை இப்பொழுது குறைந்து வருகிறது. முகவெட்டுள்ளவர்களுக்கு நடிக்கும் திறன் அதிகமாக வருவதில்லை. நடிக்கும் திறன் உள்ளவர்களுக்கு முகவெட்டு வாய்ப்பாக இருப்பதில்லை. இவ்வித ஒத்துழைப்பும் வேறுபல ஒத்துழைப்பும் ஊக்கமும் இல்லாததாலேயே ஈழத்தில் இத்தக்குறை இருந்து வந்தது இப்போது இவ்வித ஒத்துழைப்புக்களும் ஊக்கமும் கூடிவருவதால் இக்குறைகள் குறைந்து வருகிறது.

இருபத்தியொருவயது இளைஞர் ஆனந்த இராஜமாணிக்கத்தை சந்தித்த பொழுது இவ்வித நினைவுகள்தான் தோன்றின.

## குத்துவிளக்கு நாயகன்

ஈழத்தில் வேகமாகத் தயாராகி வரும் 'குத்துவிளக்கு' படத்தில் கதாநாயகனாக நடித்துவரும் காங்கேசன்துறையைச் சேர்ந்த இளைஞர் ஆனந்த இராசமாணிக்கம் தந்தை தாயின் சம்மதமில்லாமல் இந்தத் துறையுள் நுழைந்து விடவில்லை. அவர்களின் ஊக்கத்தினுல் தான் இத்துறைக்குள் காலடி எடுத்து வைத்துள்ளார். இதனை அவரே தெரிவித்தார்.

தந்தை ஒரு உத்தியோகத்தர். மூன்று பிள்ளைகளில் நடுப்பிள்ளை ஆனந்த இராஜமாணிக்கம் பெற்றோரின் கலை ஆர்வம் இவரைத் தமிழ்நாடு கலாக்ஷேத்திரத்தில் சேர்த்தது. இரு வருடங்கள் அங்கு முறையாகக் கதகளி, பரதநாட்டியம் பயின்று திரும்பிய ஆனந்தன் ஜி.சி.ஈ. அட்வான்ஸ்லெவல் வரை படித்தவர்.

## கலைச்சேவை

தொடர்ந்து கல்வி பயில ஆர்வமில்லையா? இந்தக் கேள்விக்குச் சிறிது சிரித்துவிட்டு கலைத்துறை என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டது என்றார்.

ஈழத்தில் பிரபலமான நாட்டிய ஆசிரியர் கலைஞர் கலாநிகேதன் வேல் ஆனந்தன் குழுவில் ஆரம்பத்தில் இருந்து மெருகு பெற்ற ஆனந்தஇராஜமாணிக்கம் இதுவரை சுமார் 70 நடன நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார் சமீபத்தில் கொழும்பு நவரங்கஹலாவில் நாட்டைக்காக்கும் நிதிக்காக பரதநாட்டிய நிகழ்ச்சியை நடத்தியபோது அமைச்சர்கள் வாயாரப் பாராட்டிய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டபோது அவரது முகம் புது அபிநயத்தால் பூரித்தது.

'குத்துவிளக்கு' தான் ஆனந்தனின் முதற்படம். இதில் அவர் நடிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை ஒரு பெரிய பாக்கியமாகவே கருதுகிறார்

## நம்பிக்கை

தமது திரையுலக வாழ்வுக்கு இப்படம் ஒரு நல்ல பாதை வகுக்கும் என நம்பும் ஆனந்தன் 'குத்துவிளக்கு' தயாரிப்பாளர் திரு வி. எஸ். துரைராஜாவின் கலை யார்வத்தைப் பெரிதும் பாராட்டினார்.

இப்படத்தில் பிரதம பாகமேற்று நடிக்கும் ஆனந்தனின் கதாநாயகியாக நடிப்பவர் நாட்டிய கலாஜோதி லீலா நாராயணன்

'குத்துவிளக்கு' ஒருவெற்றிப் படமாக அமையுமா? எனக் கேட்டபோது ஆனந்தன் அளித்த பதில்:

'நிச்சயமாக அமையும். நல்ல கதை டெலிவிஷன் அனுபவஸ்தர் பிள்யு.எஸ்: மகேந்திரனே இதனை டைரக்ட் செய்து வருகிறார்: இலங்கையின் பிரசித்தி பெற்ற பல பாகங்களில் இதற்கான படப்பிடிப்புஇப்போது மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஈழத்துதமிழ்க் கலாச்சாரத்தை இது வெளிநாடுகளுக்கும் எடுத்துக்காட்டுவதாக இருக்கும் சுமார்மூன்று மாதமாகப் படப்பிடிப்பு நடைபெற்று வரும் 'குத்து விளக்கை அடுத்த வருடத்தில் ஈழநாட்டு ரசிகர்கள் காணக்கூடியதாக இருக்கும். இந்தப் படத்தின் வெற்றியிலிருக்கும் நம்பிக்கையில் தான் 'குத்துவிளக்கு ஆனந்தன்' என அழைக்கப்படலாம். எனச் சொல்லத் தோன்றுகிறது. இவ்வாறு கூறினார் ஆனந்தன்.

## முதல் அனுபவம்

'வேலிக்கரையில் ஒரு காதல் காட்சி' இதுதான் எனது முதல் திரைப்பட அனுபவம் என்ற ஆனந்தன் இது முதல் அனுபவமாகையால் வேலியைப் பலமாகக் கையால் பிடித்ததாகவும் அதனால் வேலி பலமாக ஆடியதைச் சுவைபடக்கூறினார்.

டைரக்டர் கொடுத்த நம்பிக்கையினால் தான் தாம் தொடர்ந்து நடித்து நடுக்கத்தைக் குறைத்துக்கொண்டதாகவும்ஆனந்தன் சொன்னார்.

தமிழ் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் அநேக பரிசுகள் பெற்றிருக்கும் ஆனந்தன் தமது சிறந்த பரத நாட்டியத்தால் 'தாண்டவச் செல்வன்' எனும் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

தமது வீட்டில் இவர் கலைக்காகவும் கல்விக்காகவும் பெற்ற பரிசுகளை அழகாகப் பாதுகாத்து வருகிறார். இவரது அறையின் ஒரு பகுதி அழகை இவை அலங்கரிக்கின்றன.

—கணேஷ்



மகனைத் தவிக்க விட்டுச் செல்லப் போகிறேனே என ஏங்கும் பேரம்பலம்.

## கலை அரங்கம்

வி. எஸ். ரி. பிலிம்சாரின், குத்துவிளக்கு வெகு துரிதமாகத் தயாராகிறது. இதுவரை படமாக்கப்பட்ட காட்சிகளில் இருந்து' ஒன்பதினாயிரம் அடிகள் தொகுக்கப்படவிருக்கின்றன இம்மாத முடிவிலும் தொடர்ந்து ஜனவரியிலும் கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடைபெற இருக்கிறது. அனேகமாக, ஜனவரி மாதக் கடைசிக்குள் படப்பிடிப்பு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எடுக்கப்பட்டுள்ள வரையில் படம் நன்றாக அமைந்துள்ளது என்று படமாக்கப்பட்ட காட்சிகளைப் பார்த்தவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். வடமாகாணத்தைக் கருவாகி உள்ள இக்கதை விவசாயியின்கஷ்ட நஷ்டங்களையும், இளைஞர்களின் இன்றைய நிலையையும் சித்தரிக்கிறது.

### விவசாயியின் கதை

வானத்து மழை பார்த்து வாழும் விவசாயி வேலுப்பிள்ளையின் குடும்பம். அவரது ஒரேமகன் சோமு. சோமுவின் இரு தங்கைகள் மல்லிகாவும், ஜானகியும்.

சோமு நன்கு கல்விகற்று பட்டம்பெற்று, பணம்தேடி தங்கள் வாழவைக்கவேண்டும், அவன் கல்வியால் தங்கள் இலட்சியத்தை வாழவைக்கவேண்டும் என்றுபாடுபடுகிறது வேலுப்பிள்ளையின் குடும்பம்.

கல்லூரிப்படிப்பு முடிந்து. சர்வகலாசாலை செல்லத் தயாராகிறுன் சோமு. அறுவடைக்குத் தயாரான பயிர் அதிக மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது வேலுப்பிள்ளையின் குடும்பம் வறுமையில் வாடுகிறது.

சோமுவின் தங்கை மல்லிகா பக்கத்துவீட்டு குமாரசாமியின் மகன் செல்வராசாவைக் காதலிக்கிறுள். அவனே செல்லப்பிள்ளை. குமாரசாமியோ மனைவி நாகம்மாளிற்குப் பயந்தவர். அவர்மகள் ஜெயாவோ கொழும்பில் நாகரீகம் கற்கிறுள். கிணற்றடியிலும் படலை மறைவிலும் செல்வராசா மல்லிகா காதல்வளர்கிறது. பலகஷ்டங்களுக்கிடையில், சோமு கண்டி செல்கிறுன். வறுமை பிடித்துக்கொண்ட வேலுப்பிள்ளையை நோயும் பிடித்துக்கொள்கிறது. குடும்பத்தின் நிலைமை மோசமாகிறது.

படித்துவிட்டுவந்த சோமு வேலையின்றித் திண்டாடுகிறுன். வேலைதேடிக் கொழும்புவந்தசோமு வேலைவாய்ப்பின்றிக் கஷ்டப்பட்டு உழுதுண்டுவாழ்வதேமேல் என்ற முடிவுக்கு வந்தவனாக ஊருக்குத் திரும்புகிறுன். தனது தாயாரின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, விவசாயத்தில் ஈடுபடுகிறுன். மல்லிகாவின் காதல் வெற்றி பெற்றதா? வேலுப்பிள்ளையின்குடும்பம்ஒரதஒ நிறைவேறியதா?

இவற்றைப் படம் திரையிடப்படும்போதுநாம்பார்த்

(10-ம் பக்கம் பார்க்க)



'குத்து விளக்'கின் கதாநாயகியான லீலா யார் வரவை எதிர்பார்க்கிறுரோ?

சிறுவர் கவி நயம்—16

# வெண்கட்டி

## —இரசிகமணி கனக. செந்திநாதன்—

அன்புள்ள தம்பி,

தங்கைகளே!

உங்களைப் பெற்ற அம்மா உங்களுக்காகப் பாடுபடுகிருள். நோய்வராமல் பாதுகாக்கிருள், நோய் வந்தால் இரவு பகல் கண்விழித்து மருந்தூட்டுகிருள், தான் உண்ணுவிட்டாலும் உங்களுக்கு உணவு தருகிருள். உங்கள் அப்பாவைப்பாருங்கள். அவரும் உங்களுக்காக உழைக்கிருர்; படிக்கவைக்கிருர். நீங்கள் படிப்பில் கெட்டிக்காரர், குணத்தில் நல்லவர் என்று கேள்விப்பட்டால் அவர் சந்தோஷப்படுகிருர்.

வீட்டில் அம்மா, அப்பா என்போர் உங்களுக்காகப் பாடுபடுகின்றனர், உங்கள் ஊரில், தேசத்தில் சில பெரியவர்கள் தங்களைப்பற்றிக் கவலைப்படாமல் மக்கள் நலமே தம்நலம் என்றுபாடுபட்டனர் பாடுபடுகின்றனர். அப்படி பாடுபட்டவர்களில் மிகச் சிறந்தவர் மகாத்மா காந்தி.

மக்களில்மாத்திரம் இப்படிச் சில பெரியோர் வாழ்ந்தனர். ஆனல் நாம் உபயோகிக்கும் சில பொருட்களும் தம்மை அழித்துக்கொண்டு எமக்கு நலம் செய்கின்றன. விளங்கவில்லையா? மெழுகுவர்த்தியைப் பாருங்கள்! அது உருகி உருகி நமக்கு வெளிச்சம் தருகிறது. ஊதுவர்த்தியை நோக்குங்கள்! அது எரிந்து எரிந்து தன்னை இல்லாமற் செய்து நமக்கு நறுமணம் தருகிறது. வெண்கட்டியை ஒவ்வொருநாளும் காண்கிறீர்கள். அது தேய்ந்து தேய்ந்து உங்களுக்கு அறிவைப் புகட்டுகிறது.

ஆம், வெண்கட்டி, பெரிய மனிதர்- உண்மைத் தொண்டர் போன்றது என்று எங்கள் நாட்டுக் கவிஞர் உங்களுக்கு ஏற்றவிதமாகப் பாடியுள்ளார்.

வெண்கட்டி தன்னைப்பற்றித் தானே சொல்கிறது:-

"கறுத்த பலகை மீதில்
வெண்மை
காட்டி விளக்கந்
தருவேன்
பொறுத்தென் உடலைத்
தேய்த்துக் கல்வி
புகட்டும் தொண்டு
செய்வேன்'

கறுத்த பலகை (கரும் பலகை) யும் வெள்ளை எழுத்தும் என்ற வரியில் பல விடயங்களைக் கவிஞர் அடக்குகிருர். மன இருளை அறிவாம் ஒளி (வெண்மை) கொண்டு நீக்குபவராகிய ஆசிரியர் கரும்பலகையில் வெண்மை காட்டி விளக்கம் தருகிருர் என்கிருர் கவிஞர். என் உடலைத் தேய்த்து என்பதன் மூலம் பொறுத்து என் சொல்லைப் போட்டுக் கவிஞர் எவ்வளவோ விடயங்களை ஆராயவைக்கிருர்;

வெண்கட்டி, மேலும் பேசுகின்றது:

வாத்தியாரின்
கையில் நின்று
மனக் கருத்தைத்
தருவேன்
நேர்த்தியாகப்
பாடங்கொள்ள
நிதமும் நானிங்
குழைப்பேன்

தேய்ந்து தேய்ந்து
உருச்சிதைந்து
சிறுத் தில்லாது
போவேன்
ஆய்ந்த அறிவை
நீங்கள் கொள்ள
அகத்தில் மகிழ்வு
கொள்வேன்.

வெண்கட்டியார். 'உபாத்தியாயர்' என்று இலக்கண சுத்தமாகக் கூருமல் 'வாத்தியார்' என்று கிராமத்து மொழியில் கூறுகிருர். அதனுலென்ன? அதுவும் அவர் தியாகத்தை எண்ணும் போது இனிக்கிறது. "தேய்ந்து தேய்ந்து உருச்சிதைந்து சிறுத்து இல்லாது' போகப் போகப் போகிறவரல்லவா அவர்? அவரது வாய் மொழியைக் கேட்டால் வீட்டிற்கு ஓயாது உழைக்கும் அப்பா அம்மாவின் வார்த்தைகள் போலத்தான் இருக்கின்றன.

வெண்கட்டி தன் தியாகத்தின் உயர்வைமெச்சிமேலும் கூறுகிறது.

சின்னப் பாலர்
உங்கள் அறிவு
தெளிந்து விட்டால்
போதும்
என்னைப் பற்றி கவலை
தன்னை
என்றும் கொள்ள
மாட்டேன்

உங்கள் அறிவு
உயர்வதற்கே
உழைக்க உலகில்
ஆனேன்
இங்கு நீவிர் என்றும்
என்னை
இதயம் தன்னில்
வைப்பீர்

என்னைப்பற்றிக் கவலையில்லை என்றும்', 'இதயந்தன்னில் வைப்பீர்' என்றும் கூறும் வரிகள் அற்புதமானவை. குழந்தைகளே! உங்கள் அறிவு வளர்வதற்காக உழைக்கும் வெண்கட்டியாரை மறவாமல் இருங்கள். அதுவே போதும். பலரும் பாடமறந்த வெண்கட்டியை வைத்துக் கொண்டு பிறருக்காகப் பாடுபடுதல் என்ற தத்துவத்தைக் குழந்தைகள் மனதில் பதியும்படியாகப் பாடியுள்ளவர்கள் யார் தெரியுமா? ஈழத்தில் புகழ் பெற்ற கவிஞர் இ. நாகராஜன். நிறைநிலா, (சிறுகதை) சிலம்பு சிரித்தது (கவி. நாடகம்) ஆகிய நூல்களின் ஆசிரியர். இரண்டாவது உலகத் தமிழ்விழாக் கவிதைப் போட்டியில் பரிசில் பெற்றவர். அவரது சிறுவர் பாடல் என்ற நூலில் இக்கவிதை உள்ளது. இந்தச் 'சிறுவர் பாடல்' என்ற நூலை சண்முகநாதன் புத்தகசாலை (யாழ்ப்பாணம்) யார் இதை வெளியிட்டிருக்கிருர்கள். பாடலை ஒருசேர மீண்டும் பாருங்கள்!

கறுத்த பலகை
மீதில் வெண்மை
காட்டி விளக்கம் தருவேன்
பொறுத்தென் உடலைத்
தேய்த்துக் கல்வி
புகட்டும் தொண்டு
செய்வேன்

வாத்தியாரின்
கையில் நின்று
மனக் கருத்தைத் தருவேன்
நேர்த்தியாகப்
பாடங் கொள்ள
நிதமும் நானிங் குழைப்பேன்

தேய்ந்து தேய்ந்து
உருச் சிதைந்து
சிறுத் தில்லாது போவேன்
ஆய்ந்த அறிவை
நீங்கள் கொள்ள
அகத்தில் மகிழ்வு
கொள்வேன்

சின்னப் பாலர் உங்கள் அறிவு
தெளிந்து விட்டால்
போதும்
என்னைப் பற்றிக்
கவலை தன்னை
என்றும் கொள்ள மாட்டேன்

உங்கள் அறிவு
உயர்வதற்கே
உழைக்க உலகில் ஆனேன்
இங்கு நீவிர்
என்றும் என்னை
இதயம் தன்னில் வைப்பீர்

மழலை விருந்து இது: ஆமாம் ஐந்து ஆறு வயதுள்ள பாலகர்கள் பிறர் உதவியில்லாமல் தாங்களே பாடி மகிழக்கூடிய பாட்டுக்கள் இந்த விருந்தில் கிடைக்கும்.

### நல்ல பையன்

சொக்கன் நல்ல பையன்
மிக்க நல்ல பையன்

அக்காவோடு கூடி
ஆடுவானே பாடி.

அப்பா முதுகில் ஏறி
ஆகா ஆட்டம் ஆடி

சும்மா பார்த்துச் சிரிப்பான்
அம்மா கொஞ்சி மகிழ்வாள்.

— 'முத்தண்ணு'




### பொக்கிஷம்

கோலூர் என்ற கிராமத்திலே கந்தன் எனும் பெயருடைய கமக்காரன் வாழ்ந்துவந்தான் அவனுக்கு மூன்று புதல்வர்கள் உண்டு. அவன் தன்வீட்டு பின்புறத்திலே ஏராளமான திராட்சைப்பழத் தோட்டங்களை வைத்திருந்தான். அவன் நெற்றிவியர்வைசிந்தி திராட்சைக் கன்றுகளை பெரிய மரங்களாக்கினன். ஆனல் அவனுடைய புதல்வர்களோ மிகவும் சோம்பல் பட்டவர்கள். அவர்கள் வீட்டுத் தோட்டங்களைக் கவனிப்பதேயில்லை.


வாலிபனுக இருந்த கமக்காரன்கிழவனுய்ப்போனன். அவனுல் தோட்டத்திலே வேலைசெய்யவே முடியவில்லை. அவன் இறக்குந்தறுவாயில் இருக்கும்போது தன் புதல்வர்களை அழைத்து திராட்சைத் தோட்டத்திலே ஒரு பொக்கிஷம் இருக்கிறது. உங்கள் மூவரில் யாரேனும்சரி அதைத்தேடி எடுத்துக்கொள்ளுங்கள் என்றுகூறினன்.

சிறிதுநாளின்பின் அக்கமக்காரன் இறந்துபோகவே அவனுடைய புதல்வர்கள் திராட்சைத் தோட்டத்தைச் சோதனையிட்டார்கள். மண்வெட்டியினுலும் அலவாங்கினுலும் கிளறிக் கிளறிப் பார்த்தார்கள். ஆனல் அந்த பொக்கிஷமோ கிடைக்கவில்லை. சிலவாரம் சென்றபின் அவர்களுக்கோர் பெரும் பொக்கிஷம் கிடைத்தது.

அது என்னவென்ருல் அத் திராட்சை மரங்கள் திரள் திரளாக திராட்சைப் பழங்களைக் கொடுத்தது. அவர்கள் அதைவிற்றுப் பெரும் பணம்சம்பாதித்துச் சந்தோஷமாக வாழ்ந்துவந்தனர். அவர்கள் தந்தையார் கொடுத்த பொக்கிஷத்தை எண்ணி எண்ணிமகிழ்ந்தனர்.

அனுப்பியவர்: ந. சசிதரன்

# கம்பியூட்டரின் மூலபிதா



பிரபலம் பெற்ற ஆங்கில கணிதமேதையான சாள்ஸ் பபேஜ் காலமாகி கிட்டத்தட்ட 100 வருடங்கள் ஆகின்றன. இன்றைய அற்புதமான மின்கணித இயந்திரங்களாகக் கருதப்படும் கம்பியூட்டர்களின் மூலபிதா இவராவார். இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் நவீன மின்கணித இயந்திரங்களின் அபாரமான சாதனைகளைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது.

### கணிதத்தை வெறுத்தவர்

சாள்ஸ் பபேஜ் சிறுபராயத்திலிருந்தே கணிதத்தை வெறுத்தார். 'மூளையை உடைத்து' கணக்கிடும் வேலையை 'மனித அறிவின் கீழ்த்தரமான தொழில்' என்று அவர் வர்ணித்திருக்கிருர். மனிதன் கணக்கிடுவதில் தனது அறிவுச் சக்தியை வீண் விரயமாக்கக் கூடாதென விரும்பிய அவர் கணக்கிடும் இயந்திரம் ஒன்றை உருவாக்க வேண்டுமென நீண்ட காலமாகப் பிரயத்தனம் செய்து வந்தார்.

1821-ம் ஆண்டில் இருவகையான கணக்கிடும் இயந்திரங்களைச் சிருஷ்டிக்கும் ஆராய்ச்சியில் இறங்கினர். 20 வருடகால ஆராய்ச்சியின்பின்னாதான் இந்த இயந்திரங்களின் அமைப்பையும் அதன் செயலாக்கத்தையும் அவர் வரைபடத்தில் ஆக்க முடிந்தது.

### கணித நிகழ்ச்சி

இவ்வியந்திரங்களில் ஒன்று கணக்காய்வு இயந்திரம் எனப்படுவது. இன்றைய மின்னியக்க கம்பியூட்டரின் தொழில் நுணுக்கத்தை ஒத்த அதிசயமான இயந்திரம் இது. எண்கணித தகவல்கள் அடங்கிய 'இயந்திர மூளை' ஒன்றுமட்டும் இருந்திருந்தால் அவர் ஆக்கிய இயந்திரம் எந்தவகையான சிக்கலான கணக்குகளையும் நுட்பமாக நொடிப்பொழுதில் செய்துவிடும். துவாரமிடப்பட்ட நாடாவைப் பயன்படுத்தும் 'கணித நிகழ்ச்சி' என்று அவர் கண்டுபிடித்த முறை இன்று அதாவது 100ஆண்டுகளுக்குப் பின்பு மின்கணித இயந்திரங்களில் பாவிக்கப்படுகிறது.

நவீனமின்கணிதங்கள் இயங்கும் மூலக்கோட்பாடுகளை அவரன்றே அறிந்திருந்தார். ஆனல்அக்காலத்தில் பொறியியல்துறை பின்தங்கிய நிலையில் இருந்ததால் தாம் எண்ணியவாறு ஒரு நுட்பமான கணித இயந்திரத்தை அவரால் உருவாக்கமுடியவில்லை மின்னியக்கம் பற்றி அன்று அவர் அறிந்திருந்தால் ஒரு நூற்றூண்டு காலத்திற்கு முன்னரே இங்கிலாந்தில் மின்னியக்க கணித இயந்திரங்கள் தோன்றியிருக்கும் என்பது திண்ணம். அக்காலத்தில் நீராவி சக்திதான் இயந்திர இயக்கத்திற்கு அடிப்படையாக இருந்தது. அவர் நீராவிச் சக்தியைப் பயன்படுத்தியிருந்தால் அவரது 'கணக்காய்வு இயந்திரம்' நிமிடத்திற்கு 60 கூட்டல் கணக்குகளை மட்டும் செய்திருக்கும். ஆனல் இன்றைய மின்னியக்க கணித இயந்திரங்களோ இதனை விட நூறுமடங்கு வேகமாக இயங்கவல்லன.

சாள்ஸ் பபேஜ் 1871-ம் ஆண்டில் காலமானர். சலிப்புத் தட்டும் இக்கணக்கிடும் தொழிலிலிருந்து இயந்திரங்கள் ஒருகாலம் மனிதனை விடுவிக்கும் என்று அவர் கனவு கண்டது இன்று நனவாகிவிட்டது.

### புல்லைத்தின்னும் காலம் வரும்!

புல்லைத்தின்னும் ஆடுமாடு முதலியவற்றின் இறைச்சியில் உள்ளதைக் காட்டிலும் அப்புல்லில் இருக்கும் புரதச்சத்து பத்து மடங்காகும். இந்தியப் புள்ளிவிவரக்கழகம் கண்டு பிடித்து இத்தவலைத் தந்துள்ளது. நாம் எல்லோரும் புல்லைத்தின்னும் காலம் வந்தாலும் வரலாம்.

# நாடகம் நடத்திப் பார்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]
யப்போகிறது தராசுகோல் பிடிக்கும் விமர்சகர்களுக்கு இதைப்பற்றிப் பேசவே கூடாது.

## மேடையிடும்போது ,...

நாடகங்களைச் சிலர் இலாபமாக நடாத்துகின்றனர்; சிலர் ரிக்கற்றுக்கு நடாத்துகின்றனர். இரண்டு பாதைகளும் முட்கள் நிரம்பியவைதான். இலாபமாக நடத்தும்போது செலவினப்பிரச்சினை பெரிய பிரச்சினையாகிறது. தனிமனிதனே அன்றி ஒரு மன்றமோ அல்லது கலையில் ஈடுபாடுடைய நடிகர்களோ தான் இதைப் பொறுக்க வேண்டியிருக்கிறது. இயக்குனன் தலையில் பொறிவதும் உண்டு. 'ரிக்கற்' றுக்குத் தான் நாடகம் நடக்கிறதென்றால்கூட, மண்டப வாசலில் விற்பனையாகும் ரிக்கற்றுக்கள் எத்தனை, வீடு வீடாகப் படியேறிப் பல் இளிக்கவேண்டிய நிர்ப்பந்தம். அதிலும் எத்தனைக்கு உடன் பணம் கிடைக்கிறது. பணம் வசூல் செய்யப் பல தடவை ஏறி இறங்கவேண்டுமே. கௌரவ ரிக்கற் அனுப்பினால்கூட பார்க்க வர சில கலையன்பர்களுக்கு 'அலுப்பு' இத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியில் நாடகத்தயாரிப்புக்கு எவ்வளவு பணத்தைமுதலீடு செய்வது? சில ஆண்டுகளுக்கு முன் மன்றநாடகங்களைக் கல்லூரிகள் வரவேற்றன. ஆயிரம் ரூபாகூடக் கொடுத்துநடாத்தின. இன்றைய நிலையில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஐநூறு ரூபா தானும் கொடுத்து நடிப்பிக்க முன்வருகிறார்களில்லை.

சிங்கள நாடகங்களுக்கு ஒளியமைப்புமட்டும் எழுநூற்றைம்பது ரூபாவரை செலவிடுகிறார்கள். அது அவர்களுக்குக் கட்டுபடியாகிறது. இதனால் வேண்டிய அளவு புதிய உத்திகளைப் புகுத்தி தரமான நாடகங்களை மேடையேற்றுகின்றனர். அவர்கள் ஒரு நாடகத்தயாரிப்புக்கு மூவாயிரம் ரூபா வரைசெலவு செய்தால்கூட நட்டமடைய இடமில்லை. அந்த அளவுக்கு பலதடவை மேடையிட, பண வசூல் செய்யப் பரந்து விரிந்த பிராந்திய வசதி (7 மாகாணங்கள்) இருக்கிறது. தமிழ் நாடகத் தயாரிப்பாளனுக்கு வசதி இல்லை. கலையார்வம் காரணமாய் நாடகங்களைத் தயாரிக்கிறான், நஷ்டப்படுகிறான், நாட்டத்தைக் குறைக்கிறான். இருந்தாலும் ஏதோ ஒரு உணர்ச்சி அவனை மேலும் மேலும் கலைப்பணிக்கு உந்துகிறது.

## நாடகம் முடிந்தபின்

நாடகம் முடிந்தபின் திரைக்கு உள்ளே வந்து வாழ்த்துபவர்கள் பலர். போற்றிப் புகழ்பவர்கள் பலர். திருந்தவேண்டும் என்ற நோக்கில் மட்டந்தட்டும் மனப்பான்மை இன்றி குறைகளையும் சுட்டுபவர் சிலர் இவற்றைத் தான் பொறுக்கலாம். நடித்தவர்கள் ஒருவர்மேல் ஒருவர் பொறாமைப்படும் அளவுக்கு உயர்த்தியும் தாழ்த்தியும் பேசி அடுத்த மேடையேற்றத்துக்கே உலைவைக்கும் அளவுக்குத்தகதேனைப் பேசும் நஞ்சு உள்ளம் படைத்தவர்கள் உருவாக்கும் பிரச்னைகளை எப்படித்தான் தீர்ப்பது. இன்னுமொன்று. நாடகம்பற்றிய ஆழ்ந்த சில அடிப்படை அம்சங்களையே உணராமல் விமர்சிப்பவர்கள் இருக்கிறார்களே அவர்கள் தரும் சிரமம் பல உண்டு பாருங்கள், நாடகம் நடத்தவேண்டுமா? சூரியன்போல் கடுகச் செய்யும் விமர்சகர்களிடம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சந்திரன்போல் சதாகுளிரச் செய்பவர்களிடத்தும் கவனமாய்த்தான் இருக்கவேண்டும். நாடகம் நடாத்திய பிறகும் தயாரிப்பாளருக்கு தலையிடிதான்.


# நாவலர் உள்ளம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
ளைப் படக்கூடியது. இத்தகைய நிலை இலங்கையில் எவ்விடமும் இல்லையெனலாம். அக்கால் நடைபாதையும் மாரியில் மழைகாரணமாகச் சேறும்சகதியுமாகவே இருக்கும். இதனாற் பிரயாணஞ் செய்வது மிகவும் கஷ்டமானது. இக்காலத்தில் வெளியூர்தொடர்பு அதிகம் பாதிக்கப்படும். இத்தகைய பாதிப்பு எமது பகுதியின் முன்னேற்றத்திற்குப் பெருந் தடையாக உள்ளது.

போக்குவரத்துச் சேவை எவ்வாறோ, அவ்வாறே தந்திச்சேவையுமாகும். இங்கிருந்து தந்தித் தொடர்பிற்காகச் செல்லவேண்டிய தூரம் சுமார் இருபதுமைல்களாகும். போக்குவரத்து வசதியற்ற எம்மூருக்குத் தந்திச் சேவையும் இல்லாதிருப்பது 'பனையால் விழுந்தவனை மாடேறிமிதிப்பதற்கொப்பாகும். இங்கிருந்து தந்தியை ஒரிடத்திற்கனுப்பினால் இருநாட்கள் தாமதித்தே செல்லும் அதாவது தந்தி சாதாரண தபால் போன்றே செல்லும்.

இவ்விரு சேவைகளுமற்ற எம்மூர் 'கண்ணொளி இழந்தவன்' தன்மைபோன்றுள்ளது. என்று சீராகுமோ!


பொஸ்றின் புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே!




இன்று பெறக்கூடிய சக்திமிகு உடன் செயலாற்றும் இக்கிருமிநாசினி காய்கறி, புகையிலை ஆகியவற்றைத் தாக்கும் பீடைகளை ஒழிக்க வல்லது.

LANKEM

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம்.

லங்கெம் இலங்கை லிமிட்டெட்

சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு.

டெலிபோன்: 28333


# பனம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
கூடியனவாயும் அழகும் பலமும் உடையனவாயும் இருக்கும்.

## ஆராய்ச்சி நிலையம் வேண்டும்

இப்படியான சிறந்த தன்மைகள்கொண்ட பனைமரம் மேற்கு நாடுகளிலோ யப்பானிலோ நிற்குமானால் அதன் பெருமை வேறு விதமாய் அமைந்திருக்கும். அதிலிருந்து பெறக்கூடிய பயன்களைத் துருவி ஆராய்வதற்கு எத்தனையோ ஆய்வுகூடங்கள் எழுந்திருக்கும். எத்தனையோ விஞ்ஞானிகள் ஆய்வுகள் நடத்திக்கொண்டிருப்பர். இதில் நாம் மிகவும் பின்தங்கிவிட்டோம், இனியாவது தீவிரமாக முயற்சிக்கவேண்டும். பனம்பொருட்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கு ஆய்வுகூடம் ஒன்று அவசியம் நிறுவப்படவேண்டும்.

பனம்பொருள்களைப்பற்றி மூன்று துறையில் ஆய்வுகள் நடாத்தப்படுவதற்கு இடமுண்டென எண்ணுகிறேன்.

i கைத்தொழிலுக்கான ஆய்வு.

ii உணவு வகைகளுக்கான ஆய்வு.

iii மருத்துவகைக்கான ஆய்வு.

எனமூன்று வகையில் அது நடத்தப்படலாம்.

பனம் பொருள்களிலிருந்து செய்யப்படும் கைத்தொழில் முறைகள், வேண்டிய கருவி அமைப்புக்கள், சாயமூட்டும் முறைகள், பயிற்சிநெறிகள்பற்றி கைத்தொழிலுக்காக ஆய்வு நடத்தலாம்.

கள், கருப்பநீர், பனம்பழச்சாறு, பனங்கிழங்கு, ஒடியல் ஆகியவற்றைக் கொண்டு ஆக்கக்கூடிய உணவு வகைகளும் அவை ஒவ்வொன்றிலும் அடங்கியுள்ள சிவசத்துக்களும் பற்றி உணவுக்கான ஆய்வு நடக்கவேண்டும்.

பனம் பொருள்களிலிருந்து மருந்துகளுக்குரிய மூலப் பொருள்கள் ஏதும் பெற முடியுமா? பனம் பண்டங்கள் என்னென்ன நோய்களைத் தடுக்க உதவும் என்பவற்றை அறிய மருத்துவத் துறைக்கான ஆய்வு நடத்தப்படுதல் நலம்.

இவ்விதமான ஆய்வுகூடம் பனைகள் நிறைந்த யாழ்ப்பாணப் பகுதியில் அமைதலும் அங்குநடக்கும் ஆராய்ச்சிகளின் முடிவுகள் உடனுக்குடன் மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவைகளைப் பயன் பெறவைத்தலும் அவசியமாகும்.

## பனையுற்பத்தியைப் பெருக்குதல்

இவ்விதமாகப் பனை வளத்தைப் பெருக்கி பயன்பெறுவதற்கு பனையுற்பத்தியைப் பெருக்குதல் அவசியம். வேறு பயிர்கள் செய்யமுடியாத நிலங்களிலும் வெளியான தரைகளிலும் பயனற்ற சிறுகாடுகள்கொண்ட அரசாங்க நிலங்களிலும்இயன்றளவு பனம் விதைகள் நாட்டப்படவேண்டும். இதற்காக விசேஷ இயக்கம் நடைபெறவேண்டும். மரநாட்டு விழாக்கள்கூட நடத்தப்படலாம்.

யாழ்ப்பாணப் பகுதியை விட இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பனையை உற்பத்தி செய்யவேண்டும். இதை உற்பத்தி பண்ணுவதற்கோ பராமரிப்பதற்கோ அதிக சிரமப்படவேண்டியதில்லை. உயர்ந்த பனைமரங்கள் மழைவீழ்ச்சியை அதிகரிப்பதற்கும் உதவியாயிருக்கும்.

# "பேரீச்சம்பழம் பேசுகிறது"

பேரீச்சம்பழம்! பேரீச்சம்பழம்!! என பச்சிளம் பாலகர்கள் தொட்டு பாட்டாக்கள்வரை சுவைத்துச் சுவைத்துப் புசிக்கும் பேரீச்சம்பழமாகிய நாங்கள் உங்கள் நாட்டுப் பிரஜைகளல்ல. எங்கள் நாட்டவருக்குப் பொருளீட்டிக் கொடுக்கும் நோக்கத்தோடு வந்து உங்கள் நாட்டில் குடியேறியவர்கள். உங்களுக்கு உணவும் ஊட்டமும் அளித்து உங்களை ஆரோக்கியர்களாக்கி மகிழ்விக்கும் எங்களது தாயகம் அரபுநாடுகள்.

### எங்கள் தாயகம்

மிகப் பழங்காலத்திலிருந்தே அல்ஜீரியா, அரேபியா, வடஆபிரிக்க நாடுகளில் உள்ள இஸ்லாமியர் எமதருமையறிந்து எம்மைப் பயிரிட்டார்கள். உங்களுக்கு ஒத்துக்கொள்ளாது எங்கள் தாயகத்தின் சுவாத்தியம். ஆனால் அங்குள்ள பாலைவனச் சுவாத்தியம் எங்களுக்குப் பெரிதும் உவப்பாயிருக்கிறது. அங்கு நாம் பெருந்தொகையாக வளரக்கூடிய சாத்தியக்கூற்றைக் கண்ட வர்த்தகப் பிரியர்களாகிய இவ்விஸ்லாமியர் எம்மைப் பெருமளவில் பயிர் பண்ணினர். பழமாகவும் காயாகவும் எம்மை வெய்யிலில் வாட்டி பிறநாடுகளுக்குக் கொண்டுசென்று வியாபாரம் செய்தனர். இத்தகைய வியாபார மார்க்கமாகவே நாங்கள் உங்கள் ஊரில் குடியேற்றப்பட்டோம். எமது வர்க்கத்தினரைவேறு சில இடங்களில் பயிரிட்டுள்ளனர் எனினும் எமது செழிப்பை நீங்கள் அராபிய சகாரா பாலைவனங்களிலேயே கூடுதலாகக் காணலாம். அங்கு நாம் செழிப்புறுவதால் 'பாலைவனப் பயிர்' என்றே சிலர் எமக்கு நாமகரணம் சூட்டியுள்ளனர்.

### மூர்த்தி சிறிதானாலும்.:-

பாலைவனப் பட்டிக்காட்டுப் பழந்தானே, அப்பிள், கிறேப்ஸ், செரி போன்று அழகற்றது, கறுப்புடம்பு, பெட்டிக்குள் அடைந்து இடித்தபுளிபோல் கிடப்பது. சிறிய வஸ்து. ஈ, எறும்பின் உறைவிடம் என்றெல்லாம் எங்களைக் கழித்துவைத்து விடாதீர்கள். 'மூர்த்திசிறிதானாலும்கீர்த்திபெரிது' என்பதுபோலநாங்கள் சிறியவர்கள்தான்! ஒத்துக்கொள்ளுகிறோம்! எங்கள் பலன் உங்களுக்கு அளப்பரியது. வெளி அழகைக்கண்டு மயங்கி விடாதீர்கள்! நாங்கள் அவ்வழகுள்ள பழங்களிலும் சக்தியும் வலிமையும் வாய்ந்தவர்கள்.

எங்களை வர்த்தகப் பொருளாக்கிக்கொண்டு வாழ்க்கை நடாத்திய அரபு இஸ்லாமியரின் முக்கிய உணவாக நாம் இருக்கிறோம், அவர்கள் தங்கள் நோன்பின்போது எங்களுக்குப் பெரும் மதிப்பளிக்கிறார்கள். பாலைவனத்தில் பசுஞ்சோலையாகக் காட்சியளிப்பவை எம்மையீன்ற தாய்மரங்களே, பாலைவனத்தினூடாக வெகு தூரம் ஒட்டகத்தில் பிரயாணஞ் செய்யும் பயணிகள் எம் சோலையைக் கண்டதும் சுவர்க்கத்தைக் கண்டவர்கள்போன்று களிபேருவகை எய்துவார்கள். உடனே ஒட்டகத்திலிருந்து குதித்து எம் மரநிழலில் தங்கள் களைப்பை நீக்குவார்கள்; எங்களைப்பறித்துப் புசிப்பார்கள். எங்கள் அருகேயிருக்கும் சுனையில் நீர்பருகித் தாகம் தணிப்பார்கள். தங்கள் ஒட்டகங்களுக்கு எங்கள் தாய் மரத்தின் ஓலையை வெட்டிப் போட்டுப் பசியாற்றுவார்கள். பாலைவனத்தில் இவ்விருந்தினரை வரவேற்று விருந்தோம்பும் நாங்கள் உங்களுக்குச் சிறந்த சத்துப் பொருளாகிறோம் என்பதை நீங்கள் நம்புவீர்களா? உங்கள் வைத்தியர் கூறினால் தான் நீங்கள் நம்புவீர்கள்! அவர் உங்களுக்குச் சிபாரிசு செய்யும் சத்துப் பொருள்கள் பலவற்றை நாம் எம்முள் அடக்கி வைத்திருக்கிறோம் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்தியேயாக வேண்டும்.

### சத்துப் பொருள்கள்

இரும்புச்சத்து, சோடியம், தாமிரம், பொட்டாசியம் முதலிய கனிப்பொருள்களுக்கு நீங்கள் விலைகளை நாட வேண்டியதில்லை. நாங்கள் இவற்றை நிறையச் சேகரித்து வைத்திருக்கிறோம்.

எங்களைத் துப்பரவு செய்து அன்றாடம் உண்டு வருவீர்களானால் இவ்வளவு கனிப்பொருள்களும்உங்கள் உடம்பில் செறிந்துவிடும். புரதச்சத்தையும் உங்களுக்கு நாங்கள் அளிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். இப்புரதத்தினால் உங்கள் உடலுக்கு வலுவைத் தருகிறோம். உடம்பின் ரத்தம் அசுத்தமாகிவிட்டதா? கவலைவேண்டாம். எங்களில் செறிந்திருக்கும் இரும்புச் சத்து உங்கள் ரத்தத்தைச் சுத்திகரிக்கும் வேலையை உடனடியாக மேற்கொண்டு விடும். நாங்கள் நன்றியும் அண்டினோரையாதரிக்கும் பண்பும் உள்ளவர்கள். உங்களை நேசித்த எங்களிடம் உதவி

## "நண்ணினோர்க்கு உணவும் ஊட்டமும் அளித்து நலம்பல செய்வோம்"

### — குணம் —

கோரி எங்களையுண்ணும் உங்களைக் கைவிடமாட்டோம். உங்கள்மேல் அன்புகொண்டு உண்டவுடனேயே உங்கள் இரத்தத்துடன் இரண்டறக்கலந்துஉடலின் ஒவ்வோர் அணுவிலும் மெல்லிய நரம்புகளிலும் சக்தியைப் பரப்பி விடுவோம். உங்கள் ஜீரண சக்தியையும் அதிகரிக்க நாங்கள் உதவுவோம்.

### குழந்தைகளுக்கு உதவுவோம்

உங்கள் குழந்தைகளுக்கு இனிப்பைக் கொடுப்பதற்குப் பதில் எங்களைக் கொடுத்தீர்களானால் இனிப்பினால் ஏற்படும் பல தீமைகளிலிருந்து உங்கள் குழந்தைகளைத் தப்புவிக்கலாம். எங்களால் உங்கள் பிள்ளைகளின் பல்லுக்கு உறுதியளிக்க முடியும். ஒழுங்கான ஜீரண சக்தியையும் ஏற்படுத்த முடியும். இவை மட்டுமன்றி மலச்சிக்கலையும் விரட்டியடித்துப் பசியையும் தூண்டிவிடும் பெரிய சாதனைகளையெல்லாம் புரியும் வல்லமை எங்களிடம் உண்டு.

### உயிர் சத்துக்கள்

அடுத்து எங்களிடம் இருக்கும் ஏ, பி, ஸி உயிர்சத்துக்களை உங்களுக்கு நாங்கள் மனமுவந்து அளிப்போம். நீங்கள் நோய் வாய்ப்பட்டிருக்கும் காலத்திலும் பயமின்றி எங்களைப் புசிக்கலாம். எங்களில் உள்ள 'ஏ' உயிர்ச்சத்து நோய்வராமல் பாதுகாக்கும் தன்மையது. நுரையீரல்களில் கபதோஷம் வராமல் தடுக்கும். கண் சம்பந்தப்பட்ட நோய்களை விரட்டிவிடும் 'பி' உயிர்ச் சத்தும் 'ஏ'க்குச் சற்றேனும் சளைத்ததல்ல. நரம்பு நோய்களை அணுகவிடாது இதயத்தைப் பழுதாகாமல் பாதுகாக்கும் ஜீரணத் தொழில் உறுப்புகளை உறுதிப்படுத்தி உற்சாகமும் அளிக்கிறது.

### மூலப்பொருளாக...

உணவும் ஊட்டமும் தருவதோடு எங்கள் குடும்பம் நின்றுவிடவில்லை. கைத்தொழில் மூலப்பொருளையும் உங்களுக்கு நாங்கள் அளிக்கிறோம். கருப்பஞ் சர்க்கரையிலும் பார்க்க எங்களில் இருந்து எடுக்கும் சர்க்கரை உடலுக்குச் சிறந்தது. கருப்பஞ் சர்க்கரை புளிப்பையும் பித்தத்தையும் உண்டாக்கி உங்களுக்குத் தாகத்தையும் அபரிமிதமாக ஏற்படுத்திவிடும்.

### பழச் சர்க்கரை

எங்களைக் கொண்டு தயாரிக்கும் சர்க்கரையில் இக்குழறுபடிகளுக்கு இடமேயில்லை நாங்கள் தொந்தரவின்றி இரத்தத்துடன் கலந்து விடுவோம். எனவே கரும்பை மூலப்பொருளாகக் கொண்டு நீங்கள் சர்க்கரை எவ்வாறு தயாரிக்கிறீர்களோ அவ்வாறே பேரீச்சம்பழங்களாகிய எங்களைக் கொண்டு திறமான பழச் சர்க்கரையைத் தயாரித்து விடுவீர்கள். இதனால் சர்க்கரை மட்டுமன்றி புதிய கைத்தொழிலையும் உங்களுக்கு அளிக்கிறோம். இதேபோன்றே எங்கள்விதையை நீக்கிவிட்டு ஜாம் தயாரித்து போத்தல்களில் அடைத்து நீங்கள் உண்ணுவதோடு மட்டுமன்றி வியாபாரமும் செய்யலாம்.

### ஓலையைக்கொண்டு கூடை, பாய் முதலியன

எங்களை உங்களுக்கு அளிக்கும் எங்கள் தாய்மரம் உங்களுக்குத் தனது அழகிய ஓலைகளை மூலப்பொருளாக வழங்கக் காத்திருக்கிறது. அவ்வோலையைக் கொண்டு நீங்கள் அழகான பாய்கள் பின்னலாம். கூடைகள் செய்யலாம். அந்த ஓலைகளை விழாக்காலங்களில் சோடனைக்கும் பயன்படுத்தலாம். இவ்வாறு பலதரப்பட்ட நன்மையை அளிக்கும் எங்களை நீங்கள் உணவில் பயன்படுத்தினால் உங்கள் ஆரோக்கியம் கெடாது. எங்கள் மூலப்பொருளைப் பயன்படுத்தினால் நீங்கள் உங்கள் தொழில் வளத்தைப் பெருக்கலாம். நீங்கள்செய்த பூர்வபுண்ணியத்தால் இயற்கையன்னை மதிப்பற்ற செல்வமாகிய எங்களை உங்களுக்கு அளித்திருக்கிறாள். அவள் செய்த உதவியைப் பெற்று எங்களைப் பேணிப் பயனடைவது உங்கள் கடமை.

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணுகினம். நீயென்னடா வெண்டால் இஞ்ச வந்து படுத்திருக்கிறாய். கெதியாவா. நீங்கவந்து அடிச்சாப் பிறகுதானே விசேட மேளமெல்லாம் அடிக்கவேணும்' என்று விஷயமறியாமல் கூறினான். 'தம்பி இஞ்சைவா! நீ இண்டையத் திருவிழா நோட்டீசைப் பார்த்திருப்பாய்தானே. அதிலை கோயில் மேளத்தின்பேரெல்லே முன்னுக்குப் போடுற வழக்கம் இண்டைய நோட்டீசில அது போடவில்லை. உன்ரை கொக்காவின்ர சடங்குக்கு நான்வந்துமேளமடிக்கேல்லை அதுக்கு காத்தான் கொப்பர் உந்த வேலை செய்தவர். தம்பி நாங்கள் பேருக்காக இஞ்சை வேலை செய்யேல்லைத்தான். ஆனால் இந்தியாவிலை இருந்து வாற மேளம், இஞ்சத்தை மேளத்திற்குச் சனங்கள் குடுக்கிற மரியாதையைப்பார்த்து எங்களைப் பகிடிபண்ணமாட்டாங்களோ. இது தம்பி என்னைமட்டும் இல்லாமல் எமது சமூகத்தையே பாதிக்கும் கௌரவப் பிரச்சினை, ஆனபடியால் நான் இப்ப கோயிலுக்கு வரமாட்டன். நாங்களும் உப்புப்போட்டுத்தான் சாப்பிடுறநாங்கள்' என்று அமைதியாக ஆனால் உறுதியாகக் கூறினான்.

தியாகு படித்தவன், பண்பான உள்ளங்கொண்டவன். தகப்பன்விட்ட பிழையை உணர்ந்தான். தகப்பனிடம் நடந்தவற்றைக்கூறிச் சண்முகத்திடம் மன்னிப்புக் கேட்கும்படி சொன்னான். இதைக் கேட்டதும் உடையார் ருத்திரமூர்த்தியானார். 'டேய் என்னடா சொன்னாய், நான் ஆர்தெரியுமோ. என்னைப்போல அவனிட்டை மன்னிப்புக் கேட்கச்சொல்லுறியே. 'நீ என்ரை மகனேடா' என்று தியாகுமீது சீறிவிழுந்தார். இதற்கிடையில் வெளியிலே பெரிய சலசலப்பு ஏற்பட்டது. யாரோ ''திருவிழா மேலேதொடராதாம்'' ஏதோ சண்டையாம் என்று கதை கட்டிவிட்டதனால் கூட்டத்தினர் பரபரப்புடன் கூப்பாடு போட்டுச் சத்தமிட்டு திருவிழாக்காரரை ஏசிக்கொண்டிருந்தார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த உடையாரால் தனது மானம் தனக்குமுன்னாலே கப்பலேறுவதை உணர முடிந்தது. திருவிழா அப்படியே நின்றுவிடுமா. ஐயோ! அப்படியானால் நான் இனிஊரில் தலைநிமிர முடியுமா? அதுக்காக அவனிட்ட போய் நான் மன்னிப்புக் கேட்கிறதா என்று குமுறி மனப் போராட்டத்துக்குக் கரைகாணமுடியாது தத்தளித்தார். விரைவான சிந்தனைக்குப்பின் ஒரு முடிவுக்கு வந்தவராய் எதிர்ப்படுவோருக்கு. 'சத்தம் போடாமல் இருங்கோ மேளக்கச்சேரி தொடங்கப் போகுது' என்று சொல்லிக்கொண்டு சண்முகத்தின் வீட்டைநோக்கி ஓடினார்!

இவ்வளவையும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்த முத்துக்குமாரரும் அந்தநேரம் வீட்டுக்கு ஓடினார். ஆமாம் நாளைய திருவிழா நோட்டீசில் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்குத்தான்.

# ஈழத்தில் திறமையான...

(7-ம்பக்கத் தொடர்ச்சி

துத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படத்தில் நாட்டியக் கலாபமயில் லீலா, ஆனந்தன், ஜெயகாந்த் (நமசிவாயம்), எம். எஸ். இரத்தினம், சாந்தி, இந்திராதேவி பேரம்பலம், ராம்தாஸ் முதலிய நாடக அனுபவமுள்ள நடிகர்கள் நடிக்கிறார்கள். இதுவே முதல்படமாகஇருந்தும் அனைவரும் திறமையாக நடித்துள்ளார்கள்.

இந்தியப் படங்களில் அனுபவம் பெற்று ஈழத்தில் சிங்களப்படங்களை வெற்றிகரமாக நெறிப்படுத்தியுள்ள ஈழத்து இரத்தினம் எழுதியுள்ள திரைக்கதை வசனம் இவர்களது நடிப்புக்கு மெருகூட்டியுள்ளது. பிரபலபடப் பிடிப்பாளரும், யட்டகிய தவச என்ற சிங்களப்படத்தைவெற்றிகரமாக நெறிப் படுத்தியவருமான டபிள்யு எஸ். மகேந்திரன் குத்துவிளக்கை நெறிப்படுத்துகிறார்.

### கலைத்தாயின் தலைமகன்

ஈழத்தில் கலையார்வமுள்ளவர்களில் முதல்வராக விளங்கும் திரு. வி. எஸ். துரைராசாமூலக்கதைஎழுதி தயாரிக்கும் இந்தப் படம், ஈழத்தமிழ்ப்படத்துறையின் புதிய திருப்பமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈழத்தில் தமிழ்ப் படங்கள்உருவாகுமா என்ற கேள்விக்குரிய நிலைமாறி, இங்கும் தமிழ்ப்படம் எடுக்கமுடியும், நம்மிடையிலும் திறமைவாய்ந்த கலைஞர்களும், தொழில்நுட்பக் கலைஞர்களும் இருக்கிறார்கள் என்றும் ஈழத் தமிழ்ப்படத் துறையின் எதிர்காலத்தை குத்துவிளக்கு ஒளிவீசச்செய்யும் என்றும்நிச்சயமாகஎதிர்பார்க்கலாம்.

# கார்க்கோவில் வண்ண இசை!

உக்ரேய்னில் கார்க்கோவிலுள்ள புதிய இசையரங்கு இசையை 'வண்ணக்கோலத்தில்' அளிக்கிறது.

புராதன சீனாவிலும், இந்தியாவிலும் இந்த 'வண்ண இசை' பற்றி மக்கள் அறிந்திருந்தனர்; ஆனால் விசேஷமாக வண்ணத்துடன் கூடிய இசையை முதன்முதலில் (1913-ல்) தயாரித்தளித்த நவீன இசைக்கலைஞர் ஸ்கிரியாபின் என்றரஷ்யராவார். கார்க்கோவில் இதற்கான கருவி உருவாக்கப்பட்டுள்ளது இதனை உருவாக்கிய யூரிபிராவ்த்யுக் என்பார்ஒரு என்ஜினியர், ஓவியர், இசை அமைப்பாளர். இக்கருவியில் பற்பல வண்ண ஃபில்டர்களும், ஸ்டிரோபோஸ் கோப்புகளும்கொண்ட 51 புரொஜக்டர்கள் உள்ளன. உலகமேதைகள் பலரது இசையும்வண்ணச்சேர்க்கை ஓவியமாக இதன்மூலம் காட்டப்படுகிறது.

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
நம் நாடு


## தெரிவு

(நமது நிருபர்)

அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 175 முஸ்லிம் மாணவர் ஆசிரியர்களும், அளுத்கம ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு 35 முஸ்லிம் மாணவர் ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.


MANOHARA
Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Janaki Kurukulasuriya
in
GEETHA
(Sinhalese)

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p.m.
Poya days 4 shows
Sarah Miles
in
I WAS HAPPY HERE

கடைசி இரு தினங்கள் மட்டும்
யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்
ராஜன், லட்சுமி,
நிர்மலா, ரவிச்சந்திரன்
நடித்த
ஏன்?

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

ராஜா - யாழ் நகர்
தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30
ஏசுநாதர்-தமிழ்
இப்படத்துடன்
அண்ணாவின் இறுதியாத்திரை
எல்லா காட்சிகளிலும் காண்பிக்கப்படும்
அத்துடன்
பாப்பரசரின் இலங்கை விஜயம் தமிழில்
40 நிமிடங்கள் வரை காண்பிக்கப்படும்.

5-வது வெற்றி வாரம்
யாழ். வெலிங்டன்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ
முத்துராமன்,
அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர்
மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
அத்துடன்
பரிசுத்த பாப்பரசரின்
இலங்கை விஜயம் தமிழில்காண்பிக்கப்படும்

இங்ஸலி 2-00, 6-00, 9-30
★ ஏ.வி.எம்.ராஜன், ★ வாணிஸ்ரீ
சிவகுமார் நடித்த
அன்னையும் பிதாவும்

கெப்பிட்டல் 2-00, 6-00 9-30
ஷர்மிளா தாகூர்—ராஜேஸ்கன்னா
மற்றும்பலர் நடித்த
சக்தி பிலிம்ஸ்
ஆராதனா
(பிலிம் பெயார்விருதுகள்மூன்றுபரிசுபெற்றஹிந்திச்சித்திரம்)


# 'உரிமை பெறுவதற்கு ஒரேமுகமாக நிற்போம்'

(நமது நிருபர்)

"மறுக்கப்பட்டிருக்கும் மனித உரிமைகளைப் பெறுவதற்கு சிறுபான்மைத் தமிழர்கள் எல்லோரும் ஒரே முகமாக நின்று போராட வேண்டும்."

இவ்வாறு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் தீவுப்பகுதி கிளைத் தலைவர் திரு மு ஆறுமுகம் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வேலணையில் நடைபெற்றது. தமிழ் மக்களுள் பலவிதத் துன்பங்களையும் அனுபவித்துவரும் சிறுபான்மைத் தமிழரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சிறுபான்மைத் தமிழர்களை ஒரு சமூகமாக அதாவது தமிழர்களுள் பின்தங்கிய ஒரு பிரிவினராகப் பிரகடனப் படுத்துமாறு அ இ சி த மகாசபையின் தலைவரும் நியமன எம் பியுமான திரு எம் சி சுப்பிரமணியம் அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்த கோரிக்கையை ஆதரிக்கும் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி தீர்மானத்தைச் சமர்ப்பித்துக் கிளையின் காரியதரிசி திரு. சி. கந்தசாமி பேசுகையில், 'சிறுபான்மைத் தமிழர்களின் மனித உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு ஒரு தமிழ்க் கட்சியும் இதுவரை ஆக்கபூர்வமான போராட்டம் எதுவும நடாத்தவில்லையென்றும், எமது தலைவரை நியமன உறுப்பினராகப் பாராளுமன்றத்தில்பிரதிநிதித்துவப்படுத்தியதன் மூலம் சிறுபான்மைத் தமிழர்களின் குரலும் பாராளுமன்றத்தில் ஒலிக்க வழிசெய்த மக்கள் அரசாங்கம் செயல்படுத்தும் முற்போக்குச் செயல் திட்டங்களுக்கு சிறுபான்மைத் தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

— —

## ஈழத்துச் சிதம்பரத்தில் உற்சவம்

(நமது நிருபர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்சிவன்கோவிலில் கடந்த வெள்ளியன்று முதல் திருவெம்பாவை உற்சவம் நடைபெற்றுவருகின்றது. இறுதி நாளுக்கு முன்தினமான 9ந் திகதி ரதோற்சவமும், அன்று நள்ளிரவு மூலமூர்த்திகளுக்கு அபிஷேகமும், தொடர்ந்து நடேசர் அபிஷேகமும் நிகழும். 10ந் திகதி மாலை திருவூடல் நடைபெறும். அடியார்களின் வசதியை முன்னிட்டு 5ந் திகதியிலிருந்து இ.போ.சபையினர் விசேஷ பஸ் சேவையை ஒழுங்கு செய்துள்ளனர். மணிவாசகர் அன்னதான மடாலயத்தில் மேற்படி சபையினரால் மகேஸ்வர பூசையும் நடத்தப்படுகிறது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

**திங்கள் 4-1-71**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 5-45 திருவெம்பாவை, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 பௌத்த நற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 குரல் வகை, 7-45 திரைகானம் 8-00 நிலைய ஒலிபரப்பு, 8-15 பேச்சு, 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 தொழிலாளருடன், 10-30 படத்திலிருந்து 11-15 சிறுவர் மலர், 12-00 எமது அதிதி, 1-05 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 மெல்லிசைப் பாடல்கள், 6-30 நாட்டுப் பாடல்கள், 7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 7-30 விவேகச் சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித் தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

குழந்தைகளை

## நோய்களில் இருந்துகாப்பாற்ற திட்டம்

(நமது நிருபர்)

குழந்தைகளை வயிற்றோட்டம், ஏற்புவலி, குக்கல், நெருப்புக்காய்ச்சல், போன்ற வியாதிகள் பாதிக்காதிருப்பதற்கு சுகாதார இலாகா புதியதொரு இயக்கமொன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறது.

இத்தடுப்பியக்கத்திற்கு டாக்டர் என். எம். பி. மெண்டிஸ் பொறுப்பாளராக இருப்பார். சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரம் பெற்ற இவர் மேற்படி நோய்களின் தடுப்புத்திட்ட மொன்றை தயாரித்துள்ளார்.

— —

## முஸ்லிம் பெண் அறிவிப்பாளர்

(நமது நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் வர்த்தக சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராக முஸ்லீம் பெண்மணி செல்வி அமீனு பேகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பாத்திமா பெண்கள் பாடசாலையில் கல்வி பயின்றுர்.

— —

## கல்லூரி அலுவலகத்தில் திருட்டு

(நமது நிருபர்)

கரவெட்டியிலுள்ள ஒரு கல்லூரியில் நேற்று முன் தினம் திருடர் புகுந்து, அதிபரின் அலுவலகத்திலிருந்த மிக விலையுயர்ந்த அச்சு இயந்திரமொன்றைத் திருடிச் சென்றுவிட்டதாக பருத்தித்துறைப் பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

பொலிசார் கல்லூரிக்குப் பலத்த பாதுகாப்புக் கொடுத்துள்ளனர். புலன் விசாரணையை நெல்லியடிப் பொலிசாரும், பருத்தித் துறைப்பொலிசாரும் மேற்கொண்டுள்ளனர். வீதிகளில் இரவு நேரங்களில் நடமாடுபவர்மீது பொலிசார் கண்காணிப்பு நடாத்துகின்றனர்.


யா / புலோலி ஆண்கள் கல்லூரி பருத்தித்துறை
பிரவேசம்

8-ம் வகுப்பிலும், 9 விஞ்ஞானம், வர்த்தகம், கலை வகுப்புகளிலும்சிலஇடங்களுண்டு. 6-1-71 க்கு முன்னர் மனுச் செய்யவும்.

V. தம்பிப்பிள்ளை,
அதிபர்.
2711 1-1-71



## வரி விளம்பரம்

**விற்பனைக்கு**

சொந்தப் பாவிப்பிலுள்ள CL 7858 இலக்கமுள்ள A 40 கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஆ. இராசையா அன் சன்ஸ் 69, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2621

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் 16 பெரிய அறைகள் கொண்ட வீடு உல்லாசப் பிரயாணிகள் விடுதி, பிரசவ விடுதி போன்றவற்றிற்கு உகந்தது. உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. (LAND TRADS) லான்ட் ரிரேட்ஸ், 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2624

கொக்குவில், காங்கேசன் துறைவீதி பூநாறி மரத்தடியில் யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு அண்மையில் அமைந்துள்ள கடைக் கட்டிடமும் வீடும் 1பரப்பும் 15 குளி விஸ்திரணமானது. விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: லான்ட் ரிரேட்ஸ் 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2623

பக்கச்சி கிழக்குத் தோட்டம் நாற்றெழுபது ஏக்கர் பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். கண்டி ரோட், பளை, பக்கச்சி சந்தியிலிருந்து முக்கால் மைல் முல்லியன்ரோட்டில் தென்னை, கஜு, நிலக்கடலை, முந்திரிகைச் செய்கைக்கும் விலங்குகள் வளர்ப்பதற்கும் மிகச் சிறந்தது. ஏக்கர் ரூபா ஐநூறு மாத்திரம். கடன் பெறக்கூடிய தடையற்ற சாதனம். லான்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 6, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7453 2616

**குத்தகைக்கு**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நன்கு பிரசித்தி பெற்ற எண்ணெய் ஆலை, மூன்று சுத்தி செய்இன்ற சாதனங்களுடனும் ஒரு லேத் மெஷினுடனும் தொடர்ந்து புதுப்பிக்கப்படக்கூடிய ஐந்து வருடக் குத்தகைக்கு உண்டு. லான்ட் இன்வெஸ்ட்மென்ட், 6 பிரதானவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:7453. 2614

**கல்வி**

சித்தி நிச்சயம். காலை, பகல், மாலை, ஓய்வு நாள் வகுப்புகளுக்குப்பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜி சி. ஈ. சாதாரண கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/ மனையியல்/ தையல்/ உயர்தர கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/ஜீ.ஏ.கியூ. பி.ஏ., விசேஷ ஆங்கிலம்/ சிங்களம்/ தமிழ், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக கணிதம், வர்த்தக பூமிசாஸ்திரம், உடுப்பு தயாரித்தல், மெஷின் எம்பிரோய்டறி, பெயின்ரிங் பயிற்றப்பட்ட அனுபவமுள்ள பட்டதாரிகளால் நடாத்தப்படுகின்றன. விடுதி வசதியுண்டு. தொடர்ந்து சிறந்தபரீட்சை முடிவுகள் கிடைக்கின்றன. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி கரவெட்டி. 2571

யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (The Jaffna Education Centre) கல்விப் பொதுச் சாதாரண தராதரப் பத்திர விஞ்ஞான கலை வர்த்தக வகுப்புக்கள் (G C.E -O/L.) 6-1-71இல் ஆரம்பமாகும். உயர்தர தராதரப் பத்திர வகுப்புக்கள் (G C.E.-A/L.) 8-1-71இல் ஆரம்பமாகும். விஞ்ஞானசெய்முறைப்பாட வகுப்புக்கள் (Revision Practicals) 10-1-71இல் ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2625

## மணி மொழிகள்

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம் மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல்ஒப்ப நிற்றல் நடுவுநிலைமை எனப்படும்.

0 0

பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின் அதுவே நெறியாக மற்றப்பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்துவிடும்.

0 0 0

பாவம்செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு சமமாகத் தண்டிக்கப்படுவான்.

0 0 0

பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்லுவோன் அறிவாகிய உள்ளீடு இன்மையால் மனிதருக்குள் பதர் என்று சொல்லப்படுவான்.

- ஆறுமுகநாவலர்.








# சகல சமூகத்தினரும் அர்ச்சகராகும் உரிமை

# ஈழத்திலும் ஏன் பின்பற்றக் கூடாது?

## தம்பிரான் சுவாமிகளிடம் குன்றக்குடியார் கேட்கிறார்

(நல்லூர் நிருபர்)

"தமிழ்நாட்டில் சகல சமூகத்தினரும் அர்ச்சகராகலாம் என்று தமிழக அரசு சட்டம் கொண்டு வந்துள்ள முன் மாதிரியை யாழ்ப்பாணச் சைவமக்களும் பின்பற்றுவார்களா?" என்று நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானிடம் தமிழ்நாடு தெய்விகபேரவைத் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கேட்டார். இத்தகவலை சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளே தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் காலந்தொட்டு வைதிகசைவம் வளர்ச்சி பெற்றுவருவதனால் இத்தகைய நடைமுறைகளை யாழ்ப்பாண மக்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்றும்அரசாங்கம் இது விசயத்தில் தலையிட மாட்டாதென்றும் தாம் அவரிடம் கூறியதாகவும் சொன்னார்.

தமிழகத்தில் உள்ள சைவ நிலைக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள சைவநிலைக்கும் நிரம்பிய வேறுபாடுகள் இருப்பதனைச் சுட்டிக்காட்டி, ஈழத்தில் உள்ள சைவஆலயங்கள் தமிழகத்தில் உள்ளதுபோல பொதுச் சொத்துக்களாக இல்லாமல் தனியாருக்குச் சொந்தமாக இருப்பதினால் ஆலயப் பிரவேசம் போன்ற பிரச்சினைகளை உடனடியாக தீர்த்துவிட முடியாத கஷ்டநிலை இருப்பதாக அடிகளாருக்குத் தாம் சொன்னதாகக் கூறினார்.

சைவசமூகத்தில் உள்ள குறைபாடுகளைப் போக்க மடாதிபதிகள் முயற்சிக்காவிட்டால் அவர்களால் சமுதாயத்திற்கு எந்தவிதமான பலனும் இல்லை என்பதனைத் தெரிவித்த அடிகளார் ஈழத்தில் சைவசமய மறுமலர்ச்சி ஏற்படவேண்டும் என்ற தமது விருப்பத்தையும் சொல்லி வைத்ததாகவும் தெரிவித்தார்.

தமிழகத்தில் எல்லோரும் அர்ச்சகராகக்கூடிய திட்டத்தைத் தவத்திரு அடிகளார் ஆதரித்துள்ளபோதிலும் ஏனைய மடாதிபதிகள் அனைவரும் கண்டித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழநாடு

சாதாரண வருடம் மார்கழி மாதம் 20-ந் திகதி [4-1-71]

## திருவாசக விழா

"இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்று பாடிய மணிவாசகரின் திருவாசகவிழா இச்சமயம் திருக்கேதீச்சரம் உள்ளிட்டு, சைவ உலகிலே பல இடங்களிலும் நடைபெறுகின்றது.

இந்தப் பத்து நாட்களிலும் திருவாசகத்தைத் தவிர அதுவும் திருவெம்பாவையைத் தவிர, வேறெந்தப் பாடலும் பாடப்படாதென்பது மரபு.

தாம் பாடிய திருவாசகம் தமிழருக்கு மட்டுமல்ல, உலகமக்கள் அனைவருக்கும் பயன்படவேண்டுமென்பதே மணிவாசகரின் உள்ளக்கிடக்கை. உலகமொழியான ஆங்கிலத்தில் போப் என்பவர் மொழிபெயர்த்ததின் மூலம் இந்த நோக்கம் ஓரளவு நிறைவேறியது. சிங்களம் உள்ளிட்டு உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் இந்தத் தெய்வீகநூல் ஆக்கப்படுவதன்மூலம் உலக மக்களுக்கு இது வெகுவாகப் பயன்படுவதாக இருக்கும்.

இந்நாட்டில் சிங்கள சமூகத்தவருக்கு தமிழர்செய்யக்கூடிய பெருநன்மை, திருவாசகத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்துத் தருவதுதான். ஒரு கிறிஸ்தவ பாதிரியாரான போப் என்பவரே, இந்நூலின் அருமையை உணர்ந்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாரெனின், இந்நாட்டில் சிங்கள சமூகத்தவரின் அன்பையும் நல்லெண்ணத்தையும் பெறவிரும்பும் தமிழர், இந்த மேலான பணிமூலம் அல்லாது, வேறு எந்தவகையில் அதைப் பெறமுடியும். இதனால் தமிழர் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்துகொண்டவர்களாவர்!

திருவாசகத்தைப் பாடுவதாலோ, மொழி பெயர்ப்பதாலோ, அன்றி விழா எடுப்பதாலோ மட்டும் விரும்பிய பயன் கிடைக்க முடியாது. அதில் உள்ள கருத்துப்படி நடக்கவேண்டும். இமைப்பொழுதும் எந்நெஞ்சத்திலே இறைவனை மறவாமல் நினைக்கின்றோமா? ஒரு நாள் 24 மணி நேரத்தில், எவ்வளவு நிமிடங்கள் அவரை உண்மையில் நினைக்கின்றோம்?

அன்பே உருவான, கருணைக்கடலான இறைவனை நினைக்க நினைக்க நம் மனத்திலும் பிற உயிர்கள்பால் அன்பும் கருணையும் பிறக்கின்றது. அன்பு ஊற்றெடுப்பின் வாழ்வும் இன்பமாகிறது. துன்பமில்லா இன்ப வாழ்வுக்கான திறவுகோலும் இதுவே. நடைபெறும் திருவாசகவிழாக்கள் இதை உணர்த்தி, நம் மனதில் அன்புப் பயிரை வளர்ப்பதிலேயே அவற்றின் வெற்றியும் பயனும் அடங்கி இருக்கும்.

# உதைபந்தாட்ட ஜன நெரிசலில் 66 பேர் பலி

கிளாஸ்கோ, ஜன. 3

பிரிட்டனில் உதைபந்தாட்ட ஜனநெரிசலில் 66 பேர் மாண்டனர். 108 பேர் காயத்துக்குள்ளானார்கள்.

கிளாஸ்கோவில் ஸ்கொட்லாண்டைச் சேர்ந்த இரு கோஷ்டிகளிடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியைப்பார்ப்பதற்காகத் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களின் நெரிசலுக்குள் சிக்கித் திணறியே இவர்கள் மாண்டனராம். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சடலங்களை இனங்காண்பதில் ஸ்கொட்லன்யாட் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இதுவரைகாலமும் பிரிட்டனில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சிகளில் இதுபோன்ற சோகசம்பவம் நடந்ததில்லைஎனச்சொல்லப் படுகிறது.

## பிரதமரின்புதிய இணைப்புச்செயலாளர்

பிரதமரின் புதிய இணைப்புச்செயலாளராக திரு.எஸ். பெர்னண்டோ நியமிக்கப் பட்டுள்ளார்.

அரசாங்கப் பகுதிகளில் நடைபெறும் ஊழல், வீண் விரயம் போன்றவற்றைக் கவனிப்பதாகவே இவரது கடமைகள் அமையுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது காரியாலயம் அலரி மாளிகையின் ஒரு பகுதியில் அமைக்கப்படும், ந. நி.

---

## 100 பேருக்கு விஞத்தாள் கிடைக்கவில்லை

(வேலணை நிருபர்)

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற 6-ம் வகுப்புப்பரீட்சையின் போது 180 மாணவர்கள் பரீட்சையில் கலந்து கொண்டனர். இவர்களில் 80பேருக்கு மட்டும்தான் விஞத்தாள் கிடைத்ததாம்.

80 விஞத்தாள்கள் மட்டும் கல்விப்பகுதியிலிருந்து அனுப்பப்பட்டதால் மிகுதி 100 பரீட்சார்த்திகளுக்கும் விஞக்களைக் கரும்பலகையில்எழுதவேண்டிநேரிட்டதாம்.

## வாகனங்களுக்கு சின்னம்

கிளிநொச்சி, திங்

நாட்டின்சகல மாவட்டங்களிலுமுள்ளகூட்டுறவு இலாகாவுக்குச்சொந்தமான வாகனங்களுக்குச் சின்னங்கள் பொறிக்கக் கூட்டுறவுக் கமிஷனர் தீர்மானித்துள்ளார்.

இதன்பிரகாரம் ஒவ்வோர் மாவட்ட கூட்டுறவுப் பகுதித் தலைவர்களையும் மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவுக் கமிஷனர் அறிவித்துள்ளாரெனத்தெரியவருகிறது.

## 750 கண்கள் தானம்

(நமது நிருபர்)

இலங்கை வெளிநாடுகளுக்கு 750 கண்களைத் தானம் செய்யவிருக்கிறது இந்தியாவுக்கு 200 கண்களை இலங்கை தானம் செய்யும்;

கண்களைத் தங்களுக்கும் தந்துதவுமாறு இலங்கை அரசாங்கத்தை பாகிஸ்தான், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளும் கேட்டுள்ளன. கராச்சி சங்கத்திற்கு இக்கண்களை இலங்கை அனுப்பி வைக்கும். இந்தக் கண்கள் ஜின்னா ஞாபகார்த்த மருத்துவக்கல்லூரியில் பொருத்தப்படும்.

## தேவை

வீடு

நல்லூருக்கு அருகாமையில் அனெக்ஸ் (Annexe) வீடு தேவை. 169, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

2626

## மரண அறிவித்தல்

—த. அருமைத்துரை—

பிரபல வர்த்தகர் சுதுமலை வடக்கில் இருக்கும் மனோன்மணியின் அன்புக்கணவரும் செல்வராசா (யாழ்ப்பாணம் பெரிய தபால் ஆபீஸ்), கனகசிங்கம்(வர்த்தகர் எருவூர்), சிவபாலன்(பேராதனை பல்கலைக்கழகம்), திருமதி யோகாம்பிகை, திருமதி லீலாவதி, செல்வி ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு. த. இராசையா (வைத்தியப் பகுதி, பதுளை), திரு. சு. சத்தியமூர்த்தி (உணவுக் கட்டுப்பாட்டு அலுவலகம், கொழும்பு) ஆகியோரின் மாமனுமாகிய தம்பையா அருமைத்துரை சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் அவர்களின் ஈமக்கிரியை இன்று (4-1-71) பிற்பகல் இரண்டு மணியளவில் அவர் இல்லத்திலிருந்து மானிப்பாய், பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றாரும் உறவினர், நண்பரும் ஏற்றுக்கொள்ளவும்.

2715

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 6ஆ-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு தை மாதம்4—ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.